நம் வழி வேளாண்மை

பருவம் 22 ஜனவரி – மார்ச் 2014 இதழ் 4

இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம்வழி வேளாண்மை

பருவம் 22 ஜனவரி – மார்ச் 2014 இதழ் 4

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்
பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி

Prof. Anil Gupta,
Honey Bee,
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

வேளாண்மைக்கு இலக்கணமான ஊர்

''இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு'' – திருக்குறள்

வீடு வாசலோடு இருந்து கொண்டு பொருள்களை பாதுகாத்து (நிலம் , பசு போன்றன) மனைவி மக்களுடன் குடும்பம் நடத்துவதெல்லாம் வீட்டிற்கு வந்தவர்களை உபசரித்து உபகாரம் (வேளாண்மை) செய்வதற் குத்தான்.

பஞ்சாப் மாநிலத்தில் லூதியானா அருகே பானிசாகிப் கிராமத்தில் நாம்தாரி பிரிவை சார்ந்த சீக்கியர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள் . இங்கு 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவ்வூரில் கால்நாடைகளில் பசு மாடுகள் மட்டும் வளர்க்கப்படுகின்றன. பசுக்கள் நாட்டு இனமான சாஹிவால் இரகத்தை சார்ந்தது. இம்மாடு சராசரி 10 லிட்டர் பால் தரும் . இங்குள்ள மக்கள் பசுவின் பாலை மாத்திரம் உணவிற்கு பயன்படுத்துகின்றனர். இக்கிராமத்தை சுற்றியுள்ள பிற கிராமங்களில் எருமைகள் அதிகம் . பானிசாகிப் கிராமத்தில் யாரும் பசு மாட்டை அடித்து துன்புறுத்துவது கிடையாது. நிலத்திலுள்ள வெள்ளாமையில் பசுக்கள் மேய்ந்தாலும் துன்புறுத்தாமல் பத்திவிடுவார்கள். பசுக்களை வயதான காலத்திலும் கசாப்பிற்கு அனுப்பாமல் பாதுகாத்து வருகின்றனர். இங்குள்ள மக்கள் மாமிசம் சாபிடுவது இல்லை. இவ்வூரில் குடி , பீடி சிகரெட் அருந்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் மட்டுமல்லாது ஊரைச் சுற்றி சுமார் 2 கிலோ மீட்டர் பரப்பளவில் குடிப்பது குற்றமாகும். இந்த விதியை கிராம மக்கள் அனைவரும் கட்டுப்பாட்டுடன் கடைபிடித்து வருகின்றனர். இவ்வூரில் சமுதாயகூடமும் அன்னதான சத்திரமும் இங்குள்ள சீக்கிய கோவிலில் (குரு துவாரா) உள்ளது . இவ்வூருக்கு வரும் யாரும் எந்த நேரமும் சாப்பிட அன்னதான கூடத்திற்கு சென்று உணவருந்தலாம் . இந்த அன்னதான கூடத்தில் கிடைக்கும் மோரும் பசுமாட்டிலிருந்து தயாரிக்கப்பட்டதாகும். சமையற் கூடத்தில் சிலிண்டர் வாயு எரிபொருளாகப் பயன்படுத்தாமல் விறகு மட்டும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் இங்கு தயாரிக்கப்படும் சப்பாத்தி , உருளைகிழங்கு கூட்டு சுவையுள்ளதாக உள்ளது. பருகுவதற்கு பசும் பாலும் உண்டு. இங்கு கோதுமை , நெல் , கடுகு , பெர்சிம் (குதிரை மசால்) , கேரட் , உருளைகிழங்கு சாகுபடி நடக்கின்றது . மாட்டு சாணத்தை எருவாக பயன்படுத்துகின்றனர். தானம் , தர்மம் , கட்டுப்பாடான வாழ்க்கை முறைகளை பின்பற்றி வருவதால் இவ்வூரில் நில வளமும் , நீர் வளமும் , கொடைவளமும் கொழிக்கின்றது.

–– பெ. விவேகானந்தன்

நாட்டு பசு மாட்டிலிருந்து மூலிகை பொருட்கள் தயாரித்தல்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுகா , லட்சுமன்குடி கிராமத்தில் பிப்ரவரி 19 – 20 நாட்களில் பசு பாதுகாப்பு மற்றும் பசு பொருட்கள் தயாரிப்பு முறை பயிற்சி நாகூரார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு குஜராத் மாநிலத்திலிருந்து திரு. சங்கர் லால்ஜி அகில இந்திய கோ கிராம் சமீதியின் உறுப்பினர் மற்றும் திரு. ஜிவன்குமார், ராஷ்ட்ரதானா கோசாலா கர்நாடகா மாநிலத்திலிருந்து கலந்து கொண்டார். இப்பயிற்சியை திரு. ஆறுமுகம் மற்றும் சிவராமன் தொடங்கி வைத்தனர். 19 ம் தேதி காலையில் திரு. சங்கர் லால்ஜி அவர்கள் பேசும்போது இயற்கை விவசாயத்திற்கான மூலிகை உரங்கள் தயாரிப்பு , கால்நடை மூலிகை வைத்திய முறைகள் மற்றும் பசு பாதுகாப்பு முறைகள் பற்றி விளக்கினார். மாலையில் திரு. ஜீவன்குமார் பேசுகையில் பசு பொருட்களின் மூலம் மூலிகை சாம்பு மற்றும் உடம்பு வலி தைலம் தயாரிப்பு முறையை எடுத்து கூறினார். மறு நாள் காலை 20 ம் தேதியில் காலை 6 மணிக்கு அக்னி ஹோத்ரம் செய்வது சொல்லி தரப்பட்டது. பின்பு திரு. சிவராமன் பண்ணையில் கோ பூஜை நடைபெற்றது. பல மாவட்டங்களிலிருந்து 40 இயற்கை ஆர்வலர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர். 20ம் தேதி மாலை நேரத்தில் திருவாரூர் மாவட்ட நபார்டு வங்கி மேலாளர் திரு.ரவிசங்கர் பாரம்பரிய நாட்டு நெல் ரகங்களை பாதுகாத்து வரும் விவசாயி திரு. ஜெயராமன் கலந்து கொண்டு பயிற்சியை சிறப்பித்தனர். பயிற்சியின் போது தொகுக்கப்பட்ட உத்திகள் பின்வருமாறு

மனோகரனின் இயற்கை விவசாயம்

திரு. மனோகரன் (55) சென்னை ஆழ்வார்பேட்டையில் வசித்து வருகிறார். இவர் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு சொந்தமாக 15 ஏக்கர் நிலம் உள்ளது இதில் நெல் , கரும்பு , தென்னை மற்றும் காய்கறி பயிர்கள் பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறார்.

மூலிகை பூச்சி விரட்டி தயார் செய்தல்

தேவையான பொருட்கள்: மிளகாய் வத்தல் – 1/2 கிலோ , இஞ்சி – 1/2 கிலோ , எருக்கு இலை – 1/2 கிலோ , பூண்டு – 1/2 கிலோ, மாட்டு கோமியம் – 1 லிட்டர் .

மேற்க்கண்ட அனைத்தும் எடுத்து பொடியாக நறுக்கி மாட்டுக் கோமியத்தில் சுமார் 1 மணி நேரம் ஊர வைக்கவும் . பின்னர் எடுத்து வடிகட்டி 1 லிட்டர் கரைசலுக்கு 10 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிர்களுக்கு தெளிக்கலாம். இக்கரைசலை நெல் , கரும்பு , வாழை மற்றும் காய்கறிச் செடிகளுக்கும் தெளிக்கலாம்.

பூச்சியை மாட்டு சாணம் மூலம் கட்டுப்படுத்துதல்

மாட்டு சாணம் 5 கிலோ எடுத்து இதனுடன் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 500 லிட்டர் கொள்ளவுள்ள பிளாஸ்டிக் டிரம்மில் போடவும். இதனை நிலத்தின் நடுப்பகுதியில் கொண்டு வைக்கவும். பின்னர் 100 வாட்ஸ் பல்பு எடுத்து பிளாஸ்டிக் பைப் மூலம் கட்டி பிளாஸ்டிக் டிரம்மில் மேல் இருக்குமாறு வைக்கவும். சுமார் 8 மணி நேரத்தில் பூச்சிகள் அனைத்தும் மாட்டு சாண கரைசலில் விழுந்து இறந்து விடும். இது எளிய முறை மற்றும் செலவில்லாதது என அருகிலுள்ள விவசாயிகளிடம் கூறி அவர்களையும் பின்பற்ற செய்து வருகிறார்.

மாவு பூச்சியை கட்டுப்படுத்துதல்

மாவு பூச்சியை கட்டுப்படுத்த நிலத்தில் ஆங்காங்கே 2 அடி இடைவெளி விட்டு வெண்டைச் செடி , புதினா செடி வளர்த்து வந்தால் மாவு பூச்சி கட்டுப்படும்.

கரையான் ஒழிய

பெருங்காயம் , 1/2 கிலோ இதனுடன் 200 கிராம் மிளகாய் பவுடர் சேர்த்து ஆங்காங்கே வைக்க கரையான் வராது.

முகவரி :
மனோகரன்
52 சி.பி ராமசாமி ரோடு
ஆழ்வார் பேட்டை
சென்னை – 18
செல் : 94443 88540

நிலத்தில் மண்புழு உருவாக

தேவையான பொருட்கள் :

மாட்டு சாணம் – 10 கிலோ , மாட்டு கோமியம் – 5 லிட்டர் , வெல்லம் – 2 கிலோ , புத்து மண் – 5 கிலோ . மேற்கண்ட அனைத்தும் சேர்த்து 250 லிட்டர் கொள்ளவுள்ள பிளாஸ்டிக் பிரமில் போட்டு 7 நாட்கள் ஊர வைக்கவும். பின்னர் எடுத்து வடிகட்டி 1 லிட்டர் கரைசலுக்கு 10 லிட்டர் தண்ணீர் கலந்து நிலத்தில் தெளித்தால் 20 நாட்களில் மண்புழு உருவாகி மண் வளம் பெறும்.

மூலிகை பூச்சி விரட்டி தயாரித்தல்

தேவையான பொருட்கள் :

வேப்பிலை – 1 கிலோ , எருக்கு இலை – 1 கிலோ , ஊமத்தை இலை – 1 கிலோ , புங்க இலை – 1 கிலோ, ஆமணக்கு இலை – 1 கிலோ , பூண்டு – 1/2 கிலோ , வெல்லம் – 1 கிலோ , காப்பர் சல்பேட் (மயில் துத்தம்) – 100 கிராம். மேற்கண்ட அனைத்து பொருட்களையும் தூளாக நறுக்கி 10 லிட்டர் தண்ணீரில் கலந்து கொதிக்க வைக்கவும். பின்னர் வடிகட்டி 1 லிட்டர் கரைசலுக்கு 10 லிட் நீர் கலந்து பயிருக்கு தெளிக்கலாம்.

ஜீவன்குமாரின் கோமூத்ர சாம்பு

தேவையான பொருட்கள் :

மாட்டு கோமியம் – 10 லிட்டர் , செம்பருத்தி இலை – 1 கிலோ , நெல்லிக்காய் – 1 கிலோ , சோத்துகத்தாழை – 1 கிலோ , பூந்தி கொட்டை (கொட்டை நீக்கியது) – 1/2 கிலோ , சீகைக்காய் (கொட்டை நீக்கியது) – 1/2 கிலோ. மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து 10 லிட்டர் மாட்டு கோமியத்தில் கலந்து 48 மணி நேரம் ஊர வைக்கவும் பின்னர் இதனை கொதிக்க வைத்து வடிகட்டவும். வடிகட்டிய கரைசலை சுமார் 200 மி.லி அளவுள்ள பாட்டிலில் வைத்து தலையில் தேய்த்து குளிக்கலாம்.

மாடு தீனி தின்னாமை , தண்ணீர் குடிக்காமலிருந்தால்

மாட்டின் நாக்கின் கீழ்புரத்தில் 2 கருமை நிற நரம்புகள் தெரியும் . இதனை ஒரு குண்டூசியால் குத்தி ரத்தத்தை வெளியேற்றவும். இரத்தம் முழுமையாக வெளியேறியவுடன் புளி – 50 கிராம் , பிரண்டை – 50 கிராம் , மிளகாய் பொடி 50 கிராம் , உப்பு – 1 கைபிடி எடுத்து அரைத்து பசை போல் செய்து நாக்கில் தடவவும். இவ்வாறு மாதத்திற்கு ஒரு முறை செய்தால் மாடு தீணியும் , தண்ணீரும் நன்றாகக் குடிக்கும்.

மாடு பிளாஸ்டிக் பேப்பரை தின்றுவிட்டால்

மாடு பிளாஸ்டிக் பேப்பரை சாப்பிட்டு வயிறு பெரியதாகக் காணப்பட்டால் 3 கிலோ பப்பாளி பழத்தை பொடியாக நறுக்கி கொடுக்கலாம். இதற்கும் சரியாக வில்லை யென்றால் கீழ்க்கண்ட வைத்திய முறையை பின்பற்றலாம்.

தேவையான பொருட்கள் : கடுகு எண்ணெய் – 50 மி.லி ,நல்லெண்ணெய்– 50 மி.லி ,வேப்பெண்ணெய் – 50 மி.லி விளக்கெண்ணெய் – 50 மி.லி ,மோர் – 1/2 லிட்டர் , ராகி பவுடர் – 250 கிராம் , இந்துப்பு – 10 கிராம் . மேற்க்கண்ட அனைத்தையும் சேர்த்து 200 மி.லி வீதம் மாட்டிற்கு 2 வேளை கொடுத்தால் , சாப்பிட்ட பிளஸ்டிக் பொருட்கள் சாணம் மூலம் உடனே வெளியே வந்து விடும்.

மூலிகை குடற்புழு மருந்து தயாரித்தல்

முத்தின எருக்கு இலை (மஞ்சள் கலர் உள்ளது) 7 இலைகளை எடுத்து இதனை 1 லிட்டர் தண்ணீரில் கொடுக்க வைத்து . பின்னர் வடிகட்டி மாட்டிற்கு 200 மி.லி வீதமும் ஆடுகளுக்கு 100 மி.லி வீதமும் மாதத்திற்கொருமுறை கொடுத்தால் குடற்புழு இறந்து விடும்.

உடம்பு வலி தைலம் தயாரித்தல்

தேவையான பொருட்கள் :

மாட்டு சாணம் – 1 கிலோ , மாட்டு கோமியம் – 1 லிட்டர் மாதுளை பட்டை – 200 கிராம் , விராலி இலை – 50 கிராம் , சங்கு புஷ்பம் இலை – 50 கிராம் , வேப்பிலை – 50 கிராம் , சித்தாஇலை – 50 கிராம் , வில்வம் காய் – 1 எண்ணம் , ஆவாரை – 50 கிராம் , கொன்னை மர இலை – 50 கிராம் . இஞ்சி அல்லது சுக்கு – 50 கிராம் , இலவங்கபட்டை – 10 கிராம் , நல்லெண்ணெய் – 1 லிட்டர் , கடுகு எண்ணெய் – 100 மி.லி , விளக்கெண்ணெய் – 100 மி.லி பச்ச கற்பூரம் – 20 கிராம் , தைமால்– 50 கிராம் , ஓமம் – 10 கிராம் , துளசி – 50 கிராம் தொட்டால் சினுங்கி இலை – 50 கிராம்.

செய்முறை :

1 கிலோ மாட்டு சாணத்தை எடுத்து அதில் 1/2 லிட்டர் சாறு எடுத்துக் கொள்ளவும் இதனுடன் 1 லிட்டர் மாட்டு கோமியம் சேர்த்து கரைக்கவும். பின்னர் மாதுளம் பட்டை , தொட்டால் சினுங்கி இலை , விராலி இலை , துளசி, சங்கு புஷ்பம் , வேப்பிலை , சித்தா இலை , வில்வம் காய் , ஆவாரம் , இஞ்சி , இலவங்கம் பட்டை சேர்த்து அரைத்து சாரை 2 லிட்டர் கோமியத்தில் சேர்த்து கலக்கவும். பின்னர் இதனுடன் நல்லெண்ணெய் , தேங்காயெண்ணெய் , கடுகு எண்ணெய் , விளக்கெண்ணெய் சேர்த்து 4 மணி நேரம் நன்கு காய்ச்சவும் . பின்னர் கரைசலை எடுத்து வடிகட்டி 11/2 லிட்டர் கரைசலுக்கு 100 கிராம் மெந்தால் , 20 கிராம் பச்ச கற்பூரம் 50 கிராம் தைமால் சேர்த்து நன்கு கிளரவும்.

பின்னர் இக்கரைசலை கொதிக்க வைத்து இதனுடன் 50 கிராம் நீலகிரி தைலம் , 25 கிராம் துளசி எண்ணெய் , 25 கிராம் வெங்காய எண்ணெய் சேர்த்து கிளரவும். பின்னர் கரைசலை எடுத்து சுமார் 200 மி.லி கொள்ளளவுள்ள பாட்டிலில் போட்டு வைத்து சூரிய ஒளியில் சுமார் 1/2 மணி நேரம் வைக்கவும். அரை மணி நேரம் கழித்துப் பார்த்தால் கரைசல் கெட்டியாக மாறும். இதனை எடுத்து தலை , கால் , கை உடம்புகளில் தேய்த்தால் , உடம்பிலுள்ள வலி எல்லாம் போய் விடும் எனக் கூறுகிறார்.

மாட்டிற்கு சாத்வீக குணம்

ஒரு புல்லின் கீழ்பகுதி தாமஸ குணமாகவும், நடுப்பகுதி ராஜஸ குணமாகவும் , நுனி பகுதி சாத்வீக குணமாகவும் உள்ளது. ஆகையால் மாடு எப்பொழுதும் நுனியில் உள்ள சாத்வீக குண பகுதியை மட்டும் சாப்பிடுவதால் மாட்டிற்கு எப்பொழுதும் சாத்வீக குணம் அதிகமாக இருக்கும் எனக் கூறுகின்றனர்.

நிலத்தில் எலி வராமலிருக்க

நிலத்தில் பெருச்சாலி தொல்லை அதிகமாக இருந்தால் ஆங்காங்கே 100 கிராம் அளவு கொத்த மல்லி விதையை உடைத்து கும்மளாக வைத்து விட்டால் எலி வராது.

பொன்னுச்சாமியின் தேங்காய் நார் உரிக்கும் மற்றும் காய் வெட்டும் கருவி

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம் வட்டம் ஓடைப்பட்டி கிராமத்தில் திரு. பொன்னுச்சாமி (73) வசித்து வருகிறார். இவர் 150 நாட்கள் மட்டுமே பள்ளிக்கூடத்திற்கு சென்று படித்துள்ளார். இவருக்குச் சொந்தமாக 10 ஏக்கர் நிலமும் , 6 பசு மாடுகளும் , 55 செம்மறி , 5 நாட்டு இன கருமை நிறக் கோழியும் வைத்து பராமரித்து வருகிறார். இவருக்கு சிறு வயது முதலே மூலிகைப் செடிகள் மற்றும் அதனுடைய பயன்கள் பற்றி அறிய சிந்தனையுடனும் ஆர்வமாகவும் இருந்து வருகிறார். இதற்கு முன் இவர் மூலிகை கொசுவர்த்தி இயந்திரம் மற்றும் செம்மறி ஆடுகளுக்கு நீல நாக்கு நோய் வராமலிருக்க சோத்துக் கத்தாழை கொடுத்து நோய் முழுவதும் வராமல் தடுத்துள்ளார். இவரது கண்டுபிடிப்பில் தற்பொழுது தேங்காய் நார் உரித்தல் மற்றும் காய் வெட்டும் கருவியை உருவாக்கியுள்ளார்.

தேங்காய் நார் உரித்தல் , காய் வெட்டும் கருவி

சுமார் 3 மாதங்களுக்கு முன்பு பொன்னுச்சாமி தனது நண்பரான ஆறுமுகம் (அம்பிளிக்கை அருகில் லேத் ஒர்க்சாப் ஒன்று வைத்து பல கருவிகள் செய்து கொடுத்து வருகிறார்) உதவியுடன் தேங்காய் உரித்தல் மற்றும் காய் வெட்டும் கருவி தயார் செய்ய வேண்டும் என ஆலோசித்து சுமார் 2 மாதத்தில் இயந்திரத்தை உருவாக்கி 90 சதவீதம் முழுமை பெற்று விட்டது.

கருவியின் முக்கிய பாகங்கள் : கருவியின் கீழ் தளம்– 2அடி , கைபிடி –2 அடி , பேரிஸ் – 2 ரூ. 300 , ஸ்பிரிங் – 2 ரூ. 500 , ஆங்கிள் – 6 அடி நீளம் , பிளேடு – 1 அடி ரூ. 1000 எடைக்கல் – 30 கிலோ .

கருவி வேலை செய்யும் விதம் : முதலில் தேங்காயை கீழ்தள பாகத்தில் பிளேடுக்கு நேராக வைக்கவும் ; பின்பு கருவியின் கைபிடியை கிழ்புறமாக உந்தி அழுத்தினால் 30 கிலோ எடைக் கல்பெட்டியானது பிளேடு மூலம் அழுத்தி தேங்காயை இரண்டாக பிளந்து விடுகிறது. இதில் 2 செட் ஸ்பிரிங் பொருத்தப்பட்டுள்ளதால் ஆங்கிளை இயக்குவதற்கு மிக எளிதாக உள்ளது. இதே பிளேடில் நார் உரிப்பதற்கான பாகத்தைபெருத்தி கைபிடி கொண்டி தேங்காய் நார் உரித்து விடும் . இக்கருவி முழுவதும் செய்வதற்கு இது வரை ரூ. 8,000 செலவாகியுள்ளது.

கருவின் சிறப்புகள் : எரிபெருள் , மின்சாரம் தேவையில்லை முழுவதும் 2 கையால் உடைத்தால் கையாலே இயக்கிவிடலாம்; பழைய முறையில் மணிக்கு 10–20 தேங்காய் நார்கள் உரிக்கலாம். ஆனால் இந்த இயந்திரத்தின் மூலம் 1 மணிக்கு 70–80 தேங்காய்கள் உடைக்கலாம். 40 –50 தேங்காய் நார் எடுக்கலாம் . கருவியை இயக்க 2 நபர் போதுமானது . பெண்களும் இயக்கலாம். இயந்திரத்தின் எடை 30 கிலோ ஆகும். தேங்காய் உடைக்கும் போது தெரித்து ஓடாது. அருகிலேயே விழுந்து விடும். இக்கருவியை மக்கள் விரும்பினால் பல கருவிகள் செய்து தருகிறேன் என ஆர்வமாகக் கூறுகிறார்.

தேங்காய் நார் உரித்தல் மற்றும் காய் உடைத்தல் கருவியிலேயே நெல் குத்துதல்

நெல் குத்தும் போது இந்த பிளேடு மற்றும் தேங்காய் நார் உரிக்கும் பகுதியை கழட்டி விடவும். இதில் உலக்கை ஒன்று 4 அடி கொண்டதை மாட்டி விடலாம் . பின்பு கையாலே இயக்கி உரலில் நெல்லை போட்டு உலக்கையால் நெல் , அரிசி , பயறு போன்றவற்றை அரைக்க பயன்படுத்தலாம் எனக் கூறுகிறார்.

முகவரி
ந. பொன்னுச்சாமி
ஓடைப்பட்டி
அம்பிளிக்கை வழி , ஒட்டன் சத்திரம் தாலுகா
திண்டுக்கல் மாவட்டம் , செல் : 7418696344

மண்ணை நம்பி

மண்ணை நம்பி ஏலேலோ மரம் இருக்கு – ஜலேசா
மரம் இருக்கு – ஐலேசா
மரத்தை நம்பி ஏலேலோ கிளை இருக்கு – ஐலேசா
கிளை இருக்கு – ஐலேசா
கிளையை நம்பி ஏலேலோ இலை இருக்கு – ஐலேசா
இலை இருக்கு – ஐலேசா
இலையை நம்பி ஏலேலோ பூவிருக்கு – ஐலேசா
பூவிருக்கு – ஐலேசா
பூவை நம்பி ஏலேலோ காய் இருக்கு – ஐலேசா
காய் இருக்கு – ஐலேசா
காயை நம்பி ஏலேலோ கனியிருக்கு – ஐலேசா
கனி இருக்கு – ஐலேசா
கனியை நம்பி ஏலேலோ நீ இருக்க – ஐலேசா
நீ இருக்க – ஐலேசா
என்னை நம்பி ஏலேலோ நீ இருக்க – ஐலேசா
நீ இருக்க – ஐலேசா
உன்னை நம்பி ஏலேலோ நான் இருக்க – ஐலேசா
நான் இருக்க – ஐலேசா
மரமிருக்க – ஐலேசா
கிளையிருக்க – ஐலேசா
இலையிருக்க – ஐலேசா
பூவிருக்க – ஐலேசா
காயிருக்க – ஐலேசா
கனியிருக்க – ஐலேசா
நீயிருக்க – ஐலேசா
நானிருக்க – ஐலேசா
மண்ணை நம்பி ஏலேலோ மரம் இருக்கு – ஐலேசா

நன்றி : காடுகளும் மரங்களும் , பிச்சாண்டிகுளம் காடு

கண்வலி கிழங்கை முதன் முதலில் பயிர் செய்த இராஜேந்திரன் (அட்டைபட உத்தி)

சிவகாசியில் திரு. இராஜேந்திரன் (79) எஸ்.எஸ்.எல்.சி வரை படித்து விட்டு தனது குடும்ப தொழிலான தீப்பெட்டி தயாரிப்பு தொழிலில் (குடிசை தொழில்) ஈடுபடாமல் சுண்ணாம்பு கற்களை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டினார். சுண்ணாம்பு கற்களை தோண்டி எடுக்கப்பட்ட குழிகளை சுற்றி அடர்த்தியான புதர்களில் செங்காந்தல் மலர் செடி வளர்ந்திருப்பதை பார்த்தார். இச்செடியின் மலர்கள் சிவப்பாக காணப்படும். இந்த செடியின் கிழங்குகள் தோண்டப்பட்டு விற்க்கப்படுவதை அறிந்தார். இந்த கிழங்குகளை மூலிகை மருத்துவத்திற்க்காக வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில் ஆர்வம் காட்டி மூலிகை செடி விற்பனையில் ஈடுபட்டார். 1970 வரை செங்காந்தல் என்ற கண் வலி செடியின் மருத்துவ குணம்வுள்ள பகுதி கிழங்கிலிருந்து மட்டும் கிடைப்பதையே அறிந்திருந்தனர். விஞ்ஞானிகளும் கிழங்குப் பகுதியில் மட்டும் தான் இச்செடியினுடைய வீரியம் அடங்கியுள்ளது என்று கருதினர். இவர் ஒரு முறை கோயம்புத்தூர் செல்லும் பொழுது மூலனூர் பாதையில் செங்காந்தல் மலர் வேலியில் நன்கு படர்ந்திருந்ததை கண்டார். இதை உற்று நோக்கிய படி வண்டியிலிருந்து இறக்கி செடி படர்ந்திருந்த பகுதிக்குக் சென்று பார்வையிட்டார். இச்செடி படரும் வர்க்கத்தை சார்ந்தது என்று முதல் முறையாக தெரிந்து கொண்டார். இச்செடியில் காய்கள் பிடித்திருந்ததை கண்டார். இதிலிருந்து விதைகள் சேகரித்து இத்தாலியில் உள்ள மூலிகையை இறக்குமதி செய்யும் ஒரு கம்பெனிக்கு அனுப்பி வைத்து விதைகளில் மூலிகை குணம் உள்ளனவா என்பதை சோதனை செய்து தெரிவிக்கும்படி கூறியிருந்தார். இத்தாலி கம்பெனி விதைகளை சோதனை செய்து பார்த்து விட்டு இதில் மருத்துவ குணம் கிழங்கை விட மிக அதிகமாக இருப்பதை கண்டறிந்தனர். இதன் பின்னர் கிழங்குகள் ஏற்றுமதி செய்யப்படாமல் விதைகள் மட்டும் வாங்கப்பட்டது.

கண் வலி செடியினுடைய மூலிகை குணம்

இந்த கண்வலி கிழங்கிலிருந்து எடுக்கப்படும் கொல்சின் என்ற வேதிப் பொருள் இரத்த ஓட்டத்தை சீராக்க பயன்படும் . இதனால் இது மூட்டு வலி , கேன்சர் நோய்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

கண்வலி கிழங்கு செடியினை பயிரிடுதல்

இந்த செடியை பயிரிடும் முறை பற்றி விவசாயிகளிடையே எடுத்துக் கூறினார். வங்கியை அனுகி விவசாயிகளுக்கு கடன் உதவி கிடைக்குமாறு செய்தார். இதனால் விவசாயிகள் இதனை பயிரிட முன் வந்தனர். இந்த செடி செம்மன் மற்றும் சரலை பூமியில் நல்ல வடிகால் வசதி உள்ள இடத்தில் நன்கு வளரும். இச்செடிக்கு நீர் பாசனம் அவசியம். ஓர் ஏக்கர் நிலத்திற்க்கு 500 – 600 கிலோ கிழங்குகள் மூலம் 18,000 கன்றுகள் நடவு செய்யலாம். ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் இட வேண்டும். முதன் முதலாக 1982 – 83 வருடத்தில் இப்பயிர் ஒட்டன்சத்திரத்தில் சாகுபடி செய்யப்பட்டது. இவர் பல சோதனைகள் செய்து செடிகள் தரும் இடைவெளியை நிர்ணயம் செய்தார். செடிக்கு செடி 3/4 அடியும் வரிசைக்கு வரிசை 3 அடியும் தேவை கீழே நடப்பட்ட கிழங்குகளை 5 ஆண்டுகளுக்கு முறை மாற்ற வேண்டும். ஒரு கிழங்கிலிருந்து இரண்டு செடிகள் தோன்றும். இச்செடியை பயிர் செய்வதற்க்கு ஏற்ற இடமாக தாராபுரம் , மூலனூர் , காங்கேயம் பகுதிகளை தேர்வு செய்தார். இப்பகுதியில் மட்டும் 8000 ஏக்கரில் கண்வலிக் கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. இதனால் 30,000 குடும்பங்கள் இதை நம்பி சாகுபடி செய்கின்றனர். இந்த விதைகளின் விதை கீலோவிற்க்கு ரூ. 500 – 900 . சாதாரணமாக ஒரு விவசாயி ஒரு ஏக்கரிலிருந்து ரூ. 5,0000 – 200000 வரை வருமானம் எடுக்கலாம். இப்பயிரில் அயல் மகரந்தக் சேர்க்கை நடைபெற வேறு பூவிலிருந்து மகரந்தக் தூள் பஞ்சால் கட்டப்பட்ட குச்சி மூலமாக சேகரிக்கப்பட்டு பூவிலுள்ள சூலகத்தில் தடவி விட வேண்டும். இதனுடைய பூக்கும் காலம் நவம்பர் மாதம் . பூக்கும் சமையம் பூவிலுள்ள மகரந்தத்தூள் 6 மணி நேரம் மட்டும் தான் உயிறாற்றல் கொண்டதாக இருக்கும். இந்த நேரத்தில் பூக்கள் மஞ்சல் நிரத்திலிருந்து சிவப்பாக மாறும். 8 மணி நேரத்திற்க்கு பின்னர் மகரந்தத்தூலின் வீரியம் முற்றிலும் இழந்துவிடும். பூவில் 6 மகரந்தங்களும் (ஆண் பூக்கள்) ஒரு சூலகமும் காணப்படும். இத்தருநத்தில் மகரந்தத்தூலை சேகரித்து சூலகத்தின் மேல் தூவ வேண்டும். இவ்வாறு செய்த ஒரு மாதத்தில் 80 – 100 பூக்கள் வேர் பிடிக்கும். இவ்வாறு மகரந்தத்தூளை துவாமல் விட்டு விட்டால் 10 க்கும் குறைவான பூக்கள் தான் காய் பிடிக்கும் . ஓர் எக்கரில் இருந்து 200 – 250 கிலோ விதைகள் கிடைக்கும். ஒரு ஏக்கரில் 250 கிலோ வரை விதைகள் கிடைக்கும்.

டாக்ஸால் மரத்திலிருந்து புற்று நோய் குணப்படுத்தும் மருந்து

இவர் 1990 ல் அமெரிக்காவில் மிலன் என்ற மாநிலத்திற்க்கு சென்றிருந்தார். இந்த மரத்தின் பட்டையிலிருந்து டாக்சால் (Taxol) என்ற மருந்து பிரித்தெடுக்கப்பட்டு பெண்களுக்கு கர்ப்பபையில் வரும் புற்று நோயை குணப்படுத்த வல்லது என்பதை அமெரிக்கா கண்டறிந்தது. இதனால் உலகெங்கும் இம்மரத்திற்க்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. மரப்பட்டையை எடுத்து மரத்தை அழித்து விடக் கூடாது என்ற டாக்ஸால் மரத்தை பாதுகாக்கும் சட்டம் அமெரிக்கா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 100 ஆண்டு வாழ்ந்த 8 மரங்களின் பட்டை 1 நோயாளிக்கு தேவைப்பட்டது. உலகின் நாகரீக நாடான அமெரிக்காவில் மட்டும் இந்நோயால் மடிபவர்கள் 12,000க்கும் அதிகம். உலகம் அனைத்திலும் லட்சத்தை தாண்டும். அற்புதமான உயிர்காக்கும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அதை தயாரிக்க உதவும் மரப்பட்டைகள் எடுக்க தடைவிதிக்கப்பட்டது. (அப்படியே தடைவிதிக்கப் படாவிட்டாலும் அந்த மரப்பட்டைகள் அனைத்தையும் எடுத்தாலும் தேவைக்கு போதாது) உலகில் உள்ளYEW மரங்கள் சுமார் 200 வகைகள் அனைத்தும் ஆராய்ந்ததில் மற்ற மரங்களில் இதை விட மருந்து சத்து மிக மிக குறைவு. இந்த நேரத்தில் ராஜேந்திரன் இந்திய சைனா, பர்மா எல்லையில் உள்ள வடகிழக்கு இமயமலைக் காடுகளில் இதே இனத்தில் ஒரு புதிய வகை தாவரத்தை கண்டுபிடித்தார். மரப்பட்டைக்கு பதிலாக இலையை மட்டும் எடுத்தார். திரும்பதிரும்ப தளிர்த்து விடுவதால் மரம் அழிவதில்லை. இதுவரை இவ்வளவு அதிக மருந்து உள்ள தாவரம் உலகிற்கு தெரியாமல் இருந்தது. இதை கண்டுபிடிக்க மர அட்டைகள் கடி , ULFA தீவிரவாதிகள் அடி, மற்றும் சொல்ல முடியாத துயர்களின் நடுவில் ஓர் ஆண்டு முயற்சியால் கண்டுபிடித்தார். இதைக்கண்ட இத்தாலியர்கள் இந்த இரகம் உலகிற்கே புதியது. இவ்வளவு உயர்ந்த அளவு மருந்து உள்ள தாவரத்தினால் உலகமே பயனடைகிறது என்பதால் இதற்கு இவருடைய பெயரையே (TAXUS RAJENDRAN) பட்ட பெயர் சூட்டி பாராட்டினார்கள். பனிபடர்ந்த இமயமலையில் 1000க்கும்

மேற்பட்ட சதுர கிலோ மீட்டர்களில் இந்த மரம் மட்டுமே உள்ளது. இவர் மரத்தை வெட்டாமல் இலையை மட்டும் எடுத்து விற்பதற்கு 3 ஆண்டுகளுக்கு பிறகு ஏற்றுமதி தடை செய்யப்பட்டது. கோடிக்கணக்கான அன்னியச் செலவாணி சம்பாதிப்பதோடு , லட்சக்கணக்கில் உயிர்காக்கும் மருந்துச் செடிகள் தூங்கிக் கொண்டிருக்கிறது என இராஜேந்திரன் கூறுகிறார். இவர் 1995 ல் மூலிகை மருந்து கம்பெனி சிறிய அளவில் பதிவு செய்தார். இந்த கம்பெனி மூலம் தற்பொழுது 50 டன்கள் ஆண்டு தோரும் எற்றுமதி செய்யப்படுகிறது. இவர் தனது முதிர்ந்த வயதிலும் சுறு சுறுப்பாக இயங்கி வருகிறார். எளிய சைவ உணவை மட்டும் எடுத்துக் கொள்ளும் இவர் காலை 3.30 மணி எழுந்து வேலை செய்ய துவங்குகிறார். இவர் வயதானவர்களுக்கான மராதான் ஓட்டத்திலும் கலந்து கொண்டு பரிசுகள் பெற்று வருகிறார்.

இவர் வாங்கிய பரிசுகள் :

செமக்சீல்டு பரிசு – 1990 – 91 (Chemexal award)

செமக்சீல்டு பரிசு – 1992 – 93 (Chemexal award)

தமிழ்நாடு தர நிர்ணய பரிசு – 1993 (Govt. of Tamil Nadu Quality award). (மாவட்ட ஆட்சியரிடம் பரிசு பெறும் புகைபடம் அட்டை படமாக உள்ளது) .

T.D இராஜேந்திரன்
R. முருகேஷ்வரி
கெர்ப்ஸ் இந்தியா
89, தெற்கு இரதவீதி
சிவகாசி - 626 123
தொலைபேசி எண் : 04562 - 223105 , 229105

பொது இடம் மேய்ச்சல் நிலத்தில் தீவனப்பயிர் சாகுபடி மூலம் தரம் கூட்டுதல்

நமது நாட்டில் பொது இடங்கள் அல்லது மேய்ச்சல் நிலப் பகுதியை நம்பி ஏழை மக்களின் வாழ்வாதாரம் திகழ்கிறது. இந்த பொது இடத்தில் ஆடு , மாடுகளை மேய்க்கவும், மூலிகைச் செடிகளை பறிக்கவும் மற்றும் உணவுத் தேவைக்கும் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் இந்த பொது இடத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர். தற்ச்சமையம் பொது இடங்கள் பல காரணங்களினால் குறைந்து கொண்டு வருகிறது.

இராஜஸ்தான் மாநிலத்தில் பாண்டி மாவட்டத்தில் மழைப்பொழிவு 420 மி.மி. இது வறட்ச்சியான மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் குதா கோகுல்புரா கிராமத்தில் 270 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவ்வூரில் நாட்டுப் பசு 312 , கலப்பினபசு – 6 , எருமை மாடுகள் – 85 , செம்மறி ஆடு – 250 வெள்ளாடு – 850 பராமரிக்கப்படுகின்றன.

இவ்வூரில் 75 ஹெக்டேர் நிலம் பொது இடம் உள்ளது. இந்த நிலம் மேய்ச்சலுக்காக பயன்படுத்தப்படுகிறது. ஆனால் செல்வாக்கான சில விவசாயிகள் மேய்ச்சல் நிலத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இந்த பொது இடத்தில் தீவனம் பயிர் உற்பத்தி செய்து ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த ''பெய்ப்'' (BAIF) என்ற தொண்டு நிறுவனம் முன் வந்தது. இத்திட்டத்திற்க்கு ''இந்தியா–கனடா'' சுற்றுச்சுழல் மேம்பாட்டு நிதி உதவியது.

திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

குதா கோகுல்புர கிராமத்தில் ஊர்காரர்கள் மற்றும் பஞ்சாயத்து உறுப்பினர்களை வைத்து 1997 ல் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது . இதில் மகளிர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர் . ஊருக்கு சொந்தமான 112 ஏக்கரில் மேய்ச்சல் நிலத்தின் உற்பத்தி திறனை கூட்ட முடிவு செய்யப்பட்டது. இதற்க்கு ஒரு மேய்ச்சல் நில பராமரிப்பு கமிட்டி உருவாக்கப்பட்டது. இந்த மேய்ச்சல் நிலத்தில் ஏற்கனவே நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தவர்கள் இந்த திட்டத்திற்க்கு ஒப்புதல் அளிக்காமல் இருந்தனர், நாளடைவில் மேய்ச்சல் நில கூட்டம் மாதம் ஒரு முறை நடத்தி வருவதை கவனித்து தாங்கள் ஆக்கிரமித்த நிலத்தை கொடுக்க முன் வந்தனர். பெய்ப் நிறுவனம் தங்களது திட்டத்தை துவக்கியது. முதலில் 2565 மீட்டர் நீளத்துக்கு கற்சுவர் வேலி எழுப்பப்பட்டது. மேய்ச்சல் நிலத்தின் சில பகுதி (ஊருக்கு அருகாமையில் இருந்த பகுதி) மாத்திரம் வழக்கம் போல் ஆடு மாடு மேய்ப்பதற்க்கு திறந்து விடப்பட்டிருந்தது. மேய்ச்சல் நிலம் பாதுகாக்கப்பட்ட இடத்தில் மண் அரிமானம் தடுக்கப்படுவதற்க்கு வரப்புகள் 12,008 மீட்டர் அளவுக்கு அமைக்கப்பட்டது. ஓடைகளின் குறுக்காக 112 இடங்களின் கற்க்கள் மூலம் தடுப்பு சுவர் கட்டப்பட்டன. 15,315 குழிகள் வெட்டப்பட்டு அதில் கீழ்கண்ட மரக் கன்றுகள் நடப்பட்டன. சுபாபுல் (8431) , சிசு (5125), வன்னிமரம் (3960), கருங்காலி (100), கல்மூங்கில் (187) நடப்பட்டன. இந்த பகுதியில் ஏற்கனவே நாட்டு கருவேல் , இளந்தை மரங்கள் காணப்பட்டன. இம்மரங்களை ஊரில் உள்ள மக்கள் நட்டனர். ஆனால் இவர்கள் கொடுக்கப்படும் சம்பளத்தில் 10 இல் 1 பங்கு மேய்ச்சல் நில பராமரிப்பு நிதிக்கு அளித்தனர். மரம் நடும் வேலை

நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது மேய்ச்சல் நில பராமரிப்புக் குழு உறுப்பினர்களாக 12 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர் . இவர்கள் இப்பஞ்சாயத்திலுள்ள பல உட்கடை கிராமங்களைச் சார்ந்தவர்கள். பஞ்சாயத்து வார்ட் உறுப்பினர்களும் இதில் உள்ளனர். பஞ்சாயத்து செக்ரட்டரி இக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

தீவனப்புல் விதைகள் விதைத்தல்

கொழுக்கட்டை புல் 600 கிலோ, ஸ்டைலோ விதைகள் விதைக்கப்பட்டன . இப்புற்கள் அக்டோபரிலிருந்து டிசம்பர் மாதம் வரை அறுவடை செய்வதற்க்கு திறந்து விடப்பட்டன. 112 ஏக்கர் நிலத்திலிருந்து 22 டன் தீவனப்புல் அறுவடை செய்யப்பட்டது. தீவனப்புற்களை அறுவடை செய்வதற்க்கு கீழ்கண்ட விதிமுறைகள் கொண்டுவரப்பட்டன.

தீவன புற்களை அறுவடை செய்ய விதிமுறைகள்

அக்டோபர் மாதத்தில் புற்க்கள் அறுவடையை யார் வேண்டுமானாலும் அறுத்துக் கொள்ளளாம். அறுவடை செய்யும் தேதி குழு மூலம் அறிவிக்கப்படும், அறுவடை செய்த புற்களில் பாதியை குழுவிற்க்கு ஒப்படைத்து விட வேண்டும் , இந்த முறையில் குழுவிற்க்கு கிடைக்கும் புல்லை விற்ப்பனை செய்வதின் மூலம் கிடைக்கும் வருமானம் மேய்ச்சல் நிலத்தை பாதுகாக்கும் காவலாளர்களின் சம்பளத்திர்க்கும் , மேய்ச்சல் நில பராமரிப்பிற்க்கும் பயன்படுத்தப்படும்.

பயன்கள்

இதன் மூலம் 250 குடும்பங்கள் பயன் பெற்றன. கடந்த 5 ஆண்டுகளில் ரூ. 3.5 லட்சம் வருமானம் கிடைத்தது. செலவு போக ரூ. 18,289 உபரியாக உள்ளது. இந்த முறையை பார்த்து இதே தீவன உற்பத்தி முறையை 70 குடும்பங்கள் தங்களுடைய சொந்த நிலத்திலே உருவாக்கினர். இதனால் நிலங்களில் மரங்களின் எண்ணிக்கை அதிகரித்தன.

தீவன உற்பத்தியினால் மாடுகளின் எண்ணிக்கை 7 மடங்கு உயர்ந்தது. மாடுகளின் பால் உற்பதி 21/2 லிட்டரிலிருந்து 8 லிட்டராக உயர்ந்தது. இன்று இக்கிராமத்தில் 2000 லிட்டர் பால் உற்பத்தி ஆகின்றது. சிரோஜி என்ற நாட்டு வெள்ளாடு எண்ணிக்கை 37 சதவீதம் கூடியது. 13 மகளிர் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த சாதனையை பார்த்து மத்திய அரசு இதே போன்று மேய்ச்சல் நிலத்தின் தரத்தை கூட்ட 76 கிராமங்களில் 2520 ஹெக்டேரில் BGSY திட்டத்தின் மூலம் நடைமுறைபடுத்தியுள்ளது.

நன்றி : பெய்ப் நிறுவனம் , SAPPLPP , டெல்லி
Enriching Community Partners 2009

வேளாண்மை பஞ்சாங்கம்

நமது பாரம்பரிய பஞ்சாங்கம் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் வேத காலத்தில் உருவாக்கப்பட்டது. அச்சமயம் கூறப்பட்ட கிரக மண்டல அமைப்பு தற்பொழுது நிலை பெற்றுள்ள கிரக அமைப்பிலிருந்து சற்று மாறுபட்டது. நமது ஜோதிடம் பழைய பஞ்சாங்கம் முறையை தழுவியது. தற்சமயம்ப் வானிலையில் கோள்களின் நிலைபாடு கொண்டு அறிவியல் முறையில் தெரிந்து கொண்டு புதிய பஞ்சாங்கம் உருவாக்கப்பட வேண்டும். நம் வழி வேளாண்மையில் உயிர் சக்தி வேளாண்மை பஞ்சாங்கம் பிரசுரிக்கப்படுகிறது. இது வின்வெளியில் அவ்வப்போது சுற்றி வரும் கிரகங்களின் நிலைபாடுகளை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது .

சந்திரன் நின்ற ராசியை தெரிந்து கொள்ளுதல்

சந்திரன் பூமியை சுற்றி வருகிறது. இது ஒரு சுற்று சுற்றி வர 27.3 நாட்கள் எடுத்துக்கொள்ளும். இவ்வாறு சுற்றும் சமயம் எந்தெந்த நட்சத்திர கூட்டத்தின் பக்கம் வருகிறதோ அந்தந்த நட்சத்திரங்களின் தன்மையை பூமிக்கு பிரதிபலிக்கும். ஒரு குவி லென்ஸ் எவ்வாறு சூரிய ஒளியை குவித்து அனுப்புகிறதோ அதேபோல் நட்சத்திரங்களுடைய ஒளியை சந்திரன் குவித்து பூமிக்கு அனுப்பும். வின்வெளியில் நமது சூரிய மண்டலத்தில் 27 நட்சத்திரங்கள் உள்ளன. 2 அல்லது 3 நட்சத்திரங்கள் சேர்ந்தது ராசி என்று அழைக்கப்படும். 12 ராசிகள் உள்ளன. நமது பாரம்பரிய பஞ்சாங்கத்தில் சந்திரன் ஒவ்வொரு ராசியும் கடக்க 21/2 நாட்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் சில ராசிகளை கடக்க அதிக காலம் அல்லது குறிந்த காலம் எடுத்துக் கொள்ளும். உதாரணமாக கன்னி ராசியை கடக்க 4 நாட்கள் எடுத்துக் கொள்ளும். அதே சமயம் துலா ராசியை கடக்க 11/2 நாட்கள் மட்டும் எடுத்துக்கொள்ளும். இதனால் சந்திரன் நிலைப்பாடு வேளாண்மை பஞ்சாங்கத்தில் சரியாக கணக்கிடப்பட்டுள்ளது.

பொதுவாக ராசிகள் 4 குணங்களாக பிரிக்கப்பட்டுள்ளது (மண் குணம் , நீர்குணம் , காற்றுகுணம், அக்னி குணம்) . மண்குணம் கொண்ட ராசிகள் – கன்னி , மகரம் , ரிஷபம் . நீர்குணம் கொண்ட ராசிகள் – விருச்சகம் , மீனம் , கடகம் . காற்றுகுணம் கொண்ட ராசிகள் – துலாம் , கும்பம், மிதுனம் . அக்னி குணம் கொண்ட ராசிகள்– தனுசு , மேஷம் , சிம்மம் . உதாரணமாக கன்னிராசி அன்று மண் குணத்தை காட்டுமாதலால்

அதனுடன் தொடர்பு கொண்ட சேப்பங்கிழங்கு அறுவடை செய்யப்படும். சக்கரை வள்ளி கிழங்கை நடவு செய்யலாம்.

மேல் நோக்கு நாள் , கீழ் நோக்கு நாள்

தனுசு , மகரம் , கும்பம் மீனம் , மேஷம் , ரிஷபம் ராசிகள் தினம் மேல் நோக்கு நாட்களாகும். அதாவது மூலம் , பூராடம் , உத்திராடம் , அவிட்டம் , சதையம் , உத்திரட்டாதி , ரேவதி , அஸ்வினி , பரணி , கார்த்திகை , ரோகினி போன்ற நட்சத்திரங்கள் மேல் நோக்கு நாட்களை சார்ந்தது. ஆனால் நமது பாரம்பரிய பஞ்சாங்கத்தில் நட்சத்திரங்கள் வேறுபட்டிருக்கும். அறிவியல் ரீதியில் நமது வேளாண்மை பஞ்சாங்கம் மிகவும் துள்ளியமானதாக எடுத்துக் கொள்ளலாம்.

கீழ் நோக்கு நாள்

மிதுனம் , கடகம், சிம்மம் , கன்னி துலாம், விருச்சகம் ராசி நாட்கள் கீழ்நோக்கு நாட்களாகும். மிருகசீரிசம் , திருவாதிரை , புனர்பூசம் , பூசம் , ஆயில்யம் , மகம் , பூரம் , உத்திரம் , அஸ்தம் , சித்திரை , சுவாதி , விசாகம் , அனுஸம், கேட்டை ஆகிய நட்சத்திரங்கள் கீழ் நோக்கு நாட்களாகும். ஒரு நட்சத்திலிருந்து அடுத்த நட்சத்திரதரிர்க்கு செல்லும் சமையம் சம நோக்கு நாள் என்று வைத்துக் கொள்ளலாம். பழைய பஞ்சாங்கத்தில் மேல் நோக்கு நாள் , கீழ் நோக்கு நாள் கணிப்பு பழைய முறை . ஆனால் வேளாண்மை பஞ்சாங்க கணிப்பு துள்ளியமானதாகக் கொள்ளலாம்.

உயிர்சக்தி வேளாண்மை பஞ்சாங்கம் மரியாதுன் என்ற விஞ்ஞானியால் துள்ளியமாக கணிக்கப்பட்டுள்ளது.

இராகு , கேது காலம்

இச்சமையங்களில் சுப காரியங்கள் , விவசாய வேலைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும். இது சந்திரன் பாதையும் சூரியன் பாதையும் குறிக்கிடும் நாளாகும். மேல் நோக்கு நாட்களில் இந்த நிகழ்வு நடந்தால் இராகு காலம் என்றும் கீழ்நோக்க நாட்களில் இது நடந்தால் கேது காலம் என்றும் ஜோதிடப்படி அறிந்து கொள்ளலாம். இந்த குறிக்கிடும் நாட்கள் பொர்ணமி அல்லது அம்மாவாசை நாட்களில் நிகழ்ந்தால் முறையே சந்திர கிரகனம் மற்றும் சூரிய கிரகன நாட்களாகும். இதை பற்றி முறையாக தெரிந்து கொள்ள www.biodynamics.in என்ற இணையதளத்தை பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

பம்ப்செட் மோட்டாரை செல்போன் மூலம் இயக்குதல்



சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தாலுகா செட்டிகுளம் கிராமத்தில் பிரபாகரன் (19) வசித்து வருகிறார். இவர் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருடன் 2 தங்கைகள் உள்ளனர். பெற்றோர் விவசாய கூலி வேலை செய்து வருகின்றன. 2 பால் மாடு மற்றும் 5 வெள்ளாடு , 5 நாட்டுக் கோழிகள் வைத்து பராமரித்து வருகின்றனர். பிரபாகரனுக்கு குழந்தை பருவத்திலிருந்து சுமார் 15 வருடமாக இருதயத்தில் பிரச்சனை இருந்து மிகவும் கஷ்டப்பட்டுள்ளார். பின்னர் கடந்த 2 வருடத்தில் வைத்தியம் செய்து நோயிலிருந்து பூரண குணமடைந்துள்ளார். இவருக்கு சிறு வயதிலிருந்து ஏதாவது கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் படிப்பை கைவிட்டு விட்டார். 8 ம் வகுப்பு முடித்தவுடன் அழகப்பா பல்கலைக்கழகத்தில் 3 மாத எலக்ட்ரானிக் சர்வீஸ் சான்றிதழ் படிப்பை முடித்துள்ளார். படிக்கும் போது அத்தனை செய்முறைத் தேர்விலும் முதல் மாணவனாக தேர்ந்த அவருக்கு அத்துறையின் பேராசிரியர் திரு. சத்திய பிரகாஷ் இவரை பாராட்டியுள்ளார். பின்னர் அங்கேயே இந்த கண்டுபிடிப்பு சம்பந்தமாக ஒரு மாதிரி மெஷின் உருவாக்கினார். பின்னர் அத்துறையினர் பிரபாகரனுக்கு ஆலோசனை மற்றும் செய்முறைகளை விவரமாகவும் எடுத்து கூறிய பின்பு வீட்டிற்கு வந்து அச்சோதனையை முழுவதுமாக செய்துள்ளார். இந்த மெஷினை செய்து முடிக்க சுமார் 25 நாட்களே எடுத்துக் கொண்டார்.

கருவியின் முக்கிய பாகங்கள் : செல்போன் – 2 , சார்ஜர் – 3 , டிவிடி மோட்டார் – 4, சுவிட்ச் – 2 , வோல்டர் – 3 , டேப் சுவிட்ச் – 1 , பென்ச் ஸ்கேல் – 3 , போர்டு – 1 (1 / 11/ 2 இஞ்ச் அளவு) ,ப்ளக் பாயிண்ட் – 2 , ப்யூன் கேரியர் – 3 , குண்பெல்ப் – 3 , இன்டிகேட்டர் – 3 .

கருவி வேலை செய்யும் விதம்

முதலில் இந்த மெஷினை மோட்டார் ரூமில் பொறுத்தி வைக்கவும். இந்த மெஷினில் 2 செல் போன்கள் வெவ்வேறு நம்பருடன் இருக்கும். முதலில் மோட்டாரை ஆன் செய்வதற்கு முதலாவது செல்லுக்கு போன் செய்யும் போது செல் போனில் அதிர்வு ஏற்பட்டு அருகிலிலுள்ள ப்யூஸ் கனெக்ஷன் மூன்றிலும் பட்டவுடன் குண்டு பல்பில் வெளிச்சம் ஏற்படும் பின்பு டிவிடி மோட்டாரில் கரண்ட் சென்று அதில் பொருத்தப்பட்டுள்ள மோட்டாரில் சென்றவுடன் மோட்டார் ஆன் ஆகி தண்ணீர் வருகின்றது. இதனை ஆப் செய்வதற்கு இன்னொரு செல்போனுக்கு போன் செய்தால் மோட்டார் ஆப் (நின்று) ஆகிவிடும்.

கருவியின் சிறப்பு அம்சங்கள்

கருவியில் பொருத்தப்பட்டுள்ள அத்தனை பொருட்களும் பழைய பொருட்களாலும் மிகக் குறைந்த செலவில் செய்து விடலாம். செல்போன் சார்ஜர் பொருத்தப்பட்டுள்ளதால் ஆட்டோமெடிக் மூலம் செல் போனில் சார்ஜர் ஆகி விடும். இதனால் செல்போனுக்கு குறைந்த பேட்டரி 10 பேட்டாரி மற்றும் ஆப் ஆவதற்கு வாய்ப்பு குறைவு. பம்ப் செட் மோட்டார் 3 பேஸ் மோட்டார் என்பதால் 1 பீஸ் போனால் நாம் செல் போனுக்கு போன் செய்யும் போது நம்பர் பிஸி என்று சொல்லும். இதிலிருந்து நாம் கண்டு கொள்ளலாம் ஏதோ குறைபாடு என்று . மோட்டார் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் நாம் செல் போன் மூலம் இயக்கலாம். நாம் மோட்டாருக்கு அருகில் இருந்தால் கையிலே ஆன் ஆப் செய்ய சுவிட்ச் பொருத்தப்பட்டுள்ளது. 2 அல்லது 3 கி.மீ தூரம் நடந்து சென்று இயக்கு வதை விட வீட்டிலிருந்தே இயக்கலாம். இதனால் விவசாயிகளுக்கு நேரம் மிச்சமாகிறது. இக்கருவியின் விலை தற்போது ரூ. 8,000 ஆகும் தற்பொழுது இவரிடம் 4 விவசாயிகள் இந்த மாதிரியை உருவாக்க ஆடர் கொடுத்துள்ளனர்.

முகவரி :
த.பிரபாகரன்
த/பெ. தங்கராஜ்
கதவு எண் : 6 , கண்ணார் தெரு செட்டிகுளம்
மானாமதுரை தாலுகா
சிவகங்கை மாவட்டம்
செல் : 9750711943, 9003014684

பராசாரரின் வேளாண்மை

(Krishi Parashara)

வேத காலத்தில் வேளாண்மை பற்றிய குறிப்புகளை பராசாரர் என்ற ரிஷி தொகுத்துள்ளார். இதில் ஜோதிடம் , பஞ்சாங்கம் , மழை கணிப்பு , உழுதல் , விதைக்கும் காலம் , மாடுகள் பராமரித்தல் , பயிர்பாதுகாப்பு மந்திரங்கள் , லட்சுமி வழிபாடு போன்ற விவரங்கள் உள்ளன.

பராஷாரரின் மழைக் கணிப்பு

வேளாண்மை மழையை நம்பியுள்ளது. மழையை நம்பி வாழ்க்கை அமைகிறது . இதனால் மழையை பற்றிய அறிவை தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருடமும் அந்த வருடத்தை ஆட்சி செய்யும் இராஜ கிரகமும் , மந்திரி கிரகமும் , மேகத்தின் தன்மையும் மாறுபடும். இதனால் மழைப்பொழிவு வேறுபடும். புது வருடத்தில் சூரியன் ஆட்சி கிரகமாக அமைந்தால் சராசரி மழை பொழிவும் , சந்திரன் ஆளுமையாக அமைத்தால் அதிக மழையும், செவ்வாய் ஆளுமையாக அமைத்தால் குறைந்த மழையும் , புதன் ஆளுமையாக அமைந்தால் நல்ல மழையும் பெய்யும் . இதேபோல் குரு இராஜாவாக இருந்தால் திருப்தியான மழையும், சுக்கிரனால் நல்ல மழையும் மற்றும் சனியினால் சொற்ப மழையும் உண்டாகும். சூரியன் இராஜாவாக அமைந்தால் குறைந்த அளவு மழையும் சூறாவளிக்காற்றும் , மனிதர்களுக்கு கண்நோயும் , காய்ச்சல் மற்றும் பல விபரிதங்கள் நேரிடும். சந்திரன் இராஜாவாக அமையும் பொழுது நல்ல மழை பொழிவும் , நல்ல அறுவடையும் , நல்ல உடல் நலமும் கிடைக்கும். செவ்வாய் வருடத்தின் இராஜாவாக அமையும் பொழுது பயிர்களுக்கும் மனிதர்களுக்கும் நோய் உண்டாக்கும். புதன் வருடத்தின் இராஜாவாக இருந்தால் பூமியில் நோய்கள்

காணப்படாது. போக்குவரத்து தடைபடாது. பயிர் விளைச்சல் அதிகமாக காணப்படும். குரு வருடத்தின் ஆட்சியாளனாக இருந்தால் நீதியும் தர்மமும் காக்கப்படும். நல்ல மழை பொழிவு காணப்படும். பூமியின் வளம் கூடும். சுக்கிரன் (அசுரர்களின் தலைவன்) ஆட்சியாளறாகஅமைந்தால் அரசர்கள் செல்வத்துடன் திகழ்வர். நாட்டில் செழுமை கூடியிருக்கும். பலவகையான பயறு தானியங்களை மக்கள் விளைவிப்பர். சனி ஆட்சி கிரகமாக இருக்கும் பொழுது சண்டை , பகைமை ,நோய் உண்டாகும். மழைபொழிவு சொற்பம். அதே சமையம் தொடர்ந்து காற்று வீசிக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வருடத்திற்கும் எந்த கிரகம் மந்திரியாக உள்ளது எனத் தெரிந்து கொண்டு அதனுடைய பலாபலன்கள் மேலே இராஜாவுக்கு சொல்லியபடி அமையும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அந்தந்த வருடத்தின் மேகத்தின் தன்மையை தெரிந்து கொண்டு மழையின் அளவை கணிக்கலாம். ஒவ்வொரு வருடத்திற்க்கும் நெருப்பின் 3 பிரிவுகளை (3) கூட்ட வேண்டும் பின்னர் இதனை வேதங்களின் எண்ணிக்கையில் (4) வகுக்க வேண்டும். கடைசியில் மிஞ்சும் எண் மேகத்தின் தன்மையை குறிக்கும். உதாரணமாக 1920 வருடத்திற்க்கான மழையின் அளவை கணித்தல் 1920 + 3 = 1923 , 1923 வகுத்தல் 4 = 480 + மிஞ்சம் எண் 3 . 3 எண் மிஞ்சினால் அந்த வருடத்திற்க்கான மேகம் ''புஸ்கரா''. அவர்தா , சம்வர்தா , புஸ்கரா , துரேநா என்ற 4 வகை மேகங்கள் உள்ளன. அவர்தா மேகம் சில இடங்களில் மட்டும் மழை பெய்யும். சம்வர்தா மேகம் எல்லா இடங்களிலும் மழையை கொடுக்கும். புஸ்கரா மேகத்தினால் மழையின் அளவு குறையும் . துரோநா மேகத்தினால் மழை பொழிவு கூடி தண்ணீர் காடாக இருக்கும். சூரியன் கடகத்தில் நுழையும் சமயம் சந்திரன் மிதுனம் , மேஷம், ரிஷபம் , கும்பத்திலிருந்தால் நூறு மரக்கால் மழைபொழியும் (நூறு யோஜனை நீளம் , 30 யோஜனை ஆழம்) சூரியன் சிம்மம் , தனுஷ் ராசிகளில் பிரவேகிக்கும் சமயம் பாதியாவும் (50 மரக்கால்) சூரியன் விருச்சகம் அல்லது சிம்மத்தில் இருந்தால் 80 மரக்கல் மழைப்பொழிவும் கிடைக்கும். சூரியன் கடகம், கும்பம், கன்னியில் பிரவேசித்தால் 90 மரக்கால் மழை கிடைக்கும். மழைக்கு அதிபதியான இந்திரன் கிடைக்கும் மழையை 10 பகுதி கடலுக்கும் 6 பகுதி மலைப்பகுதிக்கும் 4 பகுதியை பூமிக்கும் (நிலப்பகுதி) பிரித்து வழங்குகிறார்.

திடீர் மழை வருவதற்கான அறிகுறிகள்

மழை பொழிவை முன் கூட்டியே கண்டறியும் வல்லுநரை பார்க்கச் செல்லுமிடத்தில் அவர் குளித்துக்கொண்டிருந்தாலோ, அல்லது அவரது கைகளில் தண்ணீர் இருந்தால் அல்லது அவர் உள்ள இருப்பிடத்தில் தண்ணீர் தென்பட்டால் , திடீர் மழை வருவதை கணிக்கலாம். எறும்புகள் தங்கள் கூட்டிலிருந்து முட்டைகளை வேறொரு இடத்திற்க்கு தூக்கி சென்றால் அல்லது தவளைகள் சத்தம் எழுப்பினால் திடீர் மழைக்கான அறிகுறிகள் ஆகும். பூனை , மங்கூஸ் , பாம்பு போன்ற பொந்துகளில் வாழும் விளக்குகள் மற்றும் வெட்டுக்கிளி ஆகியன அதிகம் நெகிழ்ந்து திரிவது தென்பட்டால் (மயக்கமடைந்து படுத்திருப்பது போல்) அவை திடீர் மழைக்கான அறிகுறிகள் ஆகும். குழந்தைகள் தெருவோரத்தில் மண்ணால் வீடுகட்டி , பாலம் கட்டி விளையாடினால் அல்லது மயில் நடனமாடினால் , திடீர் மழைக்கான அறிகுறிகளாகும். நாட்டு மக்கள் வெளிக்காயத்தினால் அல்லது வாததோஸத்தினால் அவதிப்பட்டால், உடல் வலியால் அவதிப்பட்டால் அல்லது பாம்புகள் மரத்தின் உச்சிக்கு எறிச்சென்றால் திடீர் மழை வருவதற்க்கான அறிகுறிகளாகும். நீர் பறவைகள் அதன் இறக்கைகளை கடும் சூரிய வெப்பத்தின் முன் காய வைத்தால் அல்லது காட்டுப் பூச்சிகள் வானத்தில் நல்ல சத்தம் எலுப்பிச் சென்றால் திடீர் மழை பெய்வதற்க்கு அறிகுறியாகும்.

கிரஹகங்களின் நிலைப்பாடு

செவ்வாய் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்க்கு பெயர்ச்சி அல்லது சனி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்க்கு சென்றாலும் குருப்பெயர்ச்சிக்கு முன்னரும் முன்பு மழை பொழிவை உண்டாவதை முன் கூட்டியே கணிக்கலாம். கிரஹங்கள் வேறு ராசிக்கு செல்லும் சமயம் அல்லது வக்கிரத்தின் சமையம் அல்லது இராஜா ஒரு முக்கிய பணிக்கு அர்ப்பணித்துள்ள சமயமும் கனமழை பொழியும் . நட்சத்திரத்தின் நடுவில் குரு சஞ்சரித்தால் மழை உடைந்த பனையிலிருந்து கொட்டுவது போல் விழும் . பிறகு சுவாதி நட்சத்திரத்தில் வந்தவுடன் பெரு மழை பொழியும் . ''புஸ்யா'' சுவாதியில் விடும். பிறகு சேமிக்கப்பட்ட தண்ணீர் ''ஸ்ரவநா'' ரேவதியில் விடும். பூஷத்தில் மழை ஆரம்பித்தால் அவாதியில் முடியும் அதேபோல் திருவோணத்தில் மேகம் திரண்டால் ரேவதியில் தான் முடியும்.

பஞ்சத்தின் அறிகுறிகள்

செவ்வாய் திடீரென்று துருவ, வைஷ்ணவ , வறங்தம், மூலம் சாக்ரா , கிருந்திகை , மகம் ஆகிய நட்சத்திரங்கள் மூலம் சென்றால் பஞ்சம் வரும். செவ்வாய் நின்ற ராசிக்கு பின்னர் சூரியன் சஞ்சரித்தால் வறட்சி நிலவும்.

செவ்வாய்க்கு எதிராக 7 வது ராசியில் சூரியன் சஞ்சரித்தால் பெரு மழைபொழியும். சுக்ரன் , சித்திரையின் நடுவில் வந்தடைந்தவுடன் மழை தடைப்படும். செவ்வாய் சிம்மத்தில் சஞ்சரிக்கும் சமயம் அனல் போன்ற வெப்பமும் சூரியனுடன் சேர்ந்து சிம்மத்தில் சஞ்சரித்தால் கடலைக் கூட ஆவியாகும் நிலை உருவாகும்.

மாடுகள் பராமரிப்பு

மாட்டுத் தொழுவத்திலிருந்து சாணத்தை ஞாயிறு, செவ்வாய் , சனிக்கிழமைகளில் வெளியே தரக்கூடாது. கார்த்திகை மாதத்தில் முதல் நாள் மாட்டுக் கொம்புக்கு மஞ்சள் கலந்த எண்ணெய் பூச வேண்டும். பின்னர் மாட்டை வழி பட வேண்டும். மணிப்பிளான் கொடியை கழுத்தில் கட்டிவிடலாம் . மாட்டிற்கு உடம்பில் சந்தனம், குங்குமம் வைத்து அலங்காரம் செய்த உழவு மாட்டை ஊரில் சுற்றி பாட்டு பாடி வரலாம். இதனால் மாடுகளுக்கு கெட்ட சூனியம் அணுகாமல் நோய் நொடியின்றி இருக்கும். மாசி மாதத்தில் முகூர்த்த நாளில் சாணக்குப்பையை வழிபட்டு பின் நிலத்திற்கு கொண்டு செல்லாம்.

விதைப்பு

விதைப்பதற்குந்த நட்சத்திரங்கள் உத்திராடம் , பூராடம் , உத்திரட்டாதி , அனுஷம் , மகம் , மிருகசீர்ஷம், ரோகினி ஹஸ்தம், ரேவதி .

மாடுகள் பராமரித்தல்

நிலங்களை மாடு வைத்து உழவு செய்ய வேண்டும். மாடுகளை துன்புறுத்தாமல் உழவு செய்ய வேண்டும். மாடுகள் துன்புறுத்தப்பட்டால் நல்ல பயிர் மகசூல் கிட்டினாலும் செல்வம் தங்காது.

மாடுகளுக்கு கரும்பு சோகை பார்லி , கோதுமை மற்றும் பிற வைக்கோல்களால் தீவனம் இட்டு காலையிலும் மாலையிலும் மேய்ச்சலுக்கு சென்று வரும் சமையம் ஆரோக்கியமாக திகழும். மாட்டு தொழுவத்தை நன்றாக சுத்தம் செய்து வைத்திருந்தால் குறைந்த பராமரிப்பிலும் மாடுகள் ஆரோக்கியமாக திகழும். மாடுகள் தொழுவத்திலிருந்து நித்தமும் வெளியே சென்று மேய்த்து வருவது ஆரோக்கியத்திற்க்கு அறிகுறி.

பண்ணை பராமரிப்பு

பண்ணை நன்கு பராமரிக்கப்பட்டால் மகசூல் கூடும். இல்லையெனில் வறுமையே வரும். சில ரிஷிகளின் கூற்றுப்படி சமையல் கூடம் அம்மாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். மாட்டுக் கொட்டம் அதனை நன்கு பராமரிக்க தெரிந்தவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். பல மனைவிகள் இருந்தால் தந்தையிடம் ஒப்படைக்க வேண்டும். அதே சமையம் விவசாயப் பண்ணையை பிறரிடம் ஒப்படைக்காமல் தானே முன்நின்று நிர்வாகம் செய்ய வேண்டும். சிறிது காலம் நேரடி நிர்வாகம் இல்லாமல் இருந்தாலும் பண்ணை பாழ்படும். ஒரு விவசாயி நித்தமும் தனது பண்ணைக்கு செல்ல வேண்டும், சாகுபடி பருவங்களையும் , விதை நேர்த்தியையும் , விதைக்கும் காலத்தையும் நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும். இதனால் விளைச்சல் கூடி பண்ணை வருமானம் அதிகரிக்கும்.

உழுவதற்க்கு சிறந்த நட்சத்திரங்கள்

சுவாதி , உத்தரட்டாதி , உத்திறாடம் , உத்திரம் , ரோகினி , மிருகசீர்ஷம் , மூலம் , புனர் பூசம், பூசம் , திருவோனம் , ஹஸ்தம் .

உழுவதற்க்குக்கான நல்ல நாட்கள்

திங்கள் , புதன் , வியாழன் , வெள்ளிக்கிழமைகளில் உழுதால் பயிர் வளர்ச்சி நன்றாக இருக்கும். பிற நாட்களில் ஆரம்பித்தால் (செவ்வாய் , சனி , ஞாயிறு) அரசர் மூலம் சிக்கல்கள் வரும். மாதத்தின் முதல் நாள் உழுவதால் எல்லாமே சரிப்பட்டு வராது. அமாவாசையில் உழுவதை தவிர்க்க வேண்டும்.

உழுவு ஆரம்பிப்பதற்க்கு நல்ல இராசிகள்

ரிஷபம் , மீனம் , கன்னி , மிதுனம் , தனுசு, விருச்சகம். உழுவதற்க்கு முன்னர் வடக்கு நோக்கி இந்திரனுக்கு பால், வெள்ளை பூக்கள் , தயிர் கலந்து அர்ப்பனம் செய்து துவக்க வேண்டும். முடிந்தால் அனுமாருக்கு நெய் விளக்கு போட்டு பணியை ஆரம்பிக்க வேண்டும்.

பூமா தேவிக்கு பிராத்தனை

''உங்கள் கருவானது பூமியில் தங்கமாக விளைந்துள்ளது. நீங்கள் புனிதமான நாகத்தின் மீது அமர்ந்து அசையும் அசையா பொருள்களை தாங்கியுள்ளீர்கள் . எனக்கு தேவையான பலன்களை கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். உழுகும் சமையம் மாடு சாணி போட்டால் பயிர் விளைச்சல் கூடும். மாடு மூத்திரம் பேய்ந்தால் வெள்ளம் ஏற்படும். ஒரு விவசாயி தனது நிலத்தை மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் மற்றும் கும்பத்தில் (ஜனவரி – 20 முதல் பிப்பரவரி – 18) நிலத்தை உழுகவில்லை எனில் வெள்ளாமையிலிருந்து வருமானம் எதிர்பார்க்க முடியாது. ஒரு விவசாயி என்று தன்னை கூறிக் கொண்டு நிலத்தில் இறங்கி உழுகாமல் இருந்தால் (பணம் அல்லது தற்பெருமை அந்தஸ்தினால் கௌரவமாக இருந்தால்) விவசாயம் செழிக்காது. நிலம் மாசி மாதத்தில் தங்கத்திற்க்கு இணையாகவும் , பங்குனி மாதத்தில் (மார்ச்) வெள்ளிக்கு இணையாகவும்

, சித்திரை (ஏப்ரல்) தாமிரத்திற்க்கு இணையாகவும் வைகாசியில் தானியத்திற்க்கு இணையாகவும் கருத்தப்படுகிறது. ஆனி மாதத்தில் நிலம் நிலமாக கருதப்படுகிறது. ஆடி மாதத்தில் நிலம் வெறும் மண்ணால் ஆனதாக கருதப்படுகிறது. ஆவணியில் உழவு செய்வது எந்த பலனையும் தவராது என்று பராசரர் கூறுகின்றார். நன்றி : Asian Agri-History Foundation publication on Krishi - Parashara

மரக்கழிவுகளிலிருந்து "பிரிக்கேட்" (எரிபொருள் கட்டி) தயாரித்தல்

மதுரை பழங்காநத்தத்தை சேர்ந்த திரு. அ. ரவீந்திரன் (வயது 55) இவர் மதுரை அமெரிகன் கல்லூரியில் தாவரவியல் பட்டம் பெற்றுள்ளார். இவர் ஆக்டிவேடட் கார்பன் வேஸ்டிலிருந்து சார்கோல் பிரிக்கடஸ் தயாரித்து வருகிறார். முதலில் பட்ட படிப்பு முடித்தவுடன் தனது குடும்ப வியாபாரமாக காபி தயாரிப்பு மற்றும் விற்பனையில் (சிவம் காபி) சிறிது காலம் பணியாற்றினார். பின்னர் விவசாய பொருட்கள் (மக்கா சோளம், பட்டாணி) 5 வருடங்கள் ஏற்றுமதி வியாபாரம் செய்துள்ளார். பின் இன்டோனேசியன் ஸ்டீம் கோல் எனும் பொருளை இறக்குமதி வியாபாரம் செய்துள்ளார். பின்னர் ஒரு நாள் இன்டர்நெட்டில் பிரிக்கட்ஸ் தயாரிப்பு முறை இவர் கவனத்திர்க்கு வந்தது. அதன் மூலம் ஒரு வருடம் கடுமையாக உழைத்து இந்த பிரிக்கட்ஸ் தயாரிப்பதை கண்டுபிடித்துள்ளார்.

பிரிக்கட்ஸ் தயாரிக்கும் முறை

முதலில் ஆக்டிவேடட் கார்பன் தயார் செய்யும் மிஷினிலிருந்து கிடைக்கக்கூடிய / விழக்கூடிய மீதம் தான் பிரிக்கட்ஸ் இன் மூலப் பொருள்.

தேங்காய் சிரட்டை / ஓடு ⟶ சார்கோலாக மாற்றப்படுகிறது ⟶ ஆக்டிவேடட் கார்பன்

விழுகின்ற மீதம் / வேஸ்ட் . இந்த மீதப் பொருளை கிலோ ரூ. 5 வீதம் வாங்கி பிரிக்கட்ஸ் மெஷினில் மீதப்பொருள் + பைன்டிங் ஏஜன்ட் கலவையை தயார் செய்து நமக்கு வேண்டியபடி டைய் செய்து மெஷினில் மூலம் பிரிக்கட்ஸ் தயார் செய்து அதை தேவையான நேரம் காய வைக்க வேண்டும்.

சிறப்பம்சம்

இதன் எரியும் நேரம் (Buning time) 21/2 மணி நேரம் . இதன் கங்கு இருக்கும் நேரம் குறைந்தது 41/2 மணி நேரம் . கார்பன் நன்றாக இருந்தால் – 51/2 மணி நேரம்.

ஒரு கிலோவிற்க்கு இதை தயார் செய்ய ரூ. 11

இதை விற்பனை செய்தால் ரூ. 18 ; இலாபம் ரூ . 7 .

திரு. ஆ. ரவீந்திரன்

34 , நீலகண்டன் கோவில் வீதி

பழங்காநத்தம் , மதுரை – 625 003 , செல் : 9566757533

சார்ஜர் உள்ளடக்கிய மெபைல் போன்

செல்போனுக்கு சார்ஜ் செய்ய சார்ஜரை உடன் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இந்த சிரமத்தைத் தவிர்க்க படத்தில் காட்டிய படி செல்போனிலே பிளக் வைத்து சார்ஜ் செய்யலாம். இந்த உத்தியை 11 வது வகுப்பு படிக்கும் மாணவன் சித்தார்த்தன் 12 வது படிக்கும் மாணவன் கரண்குமார் இருவரும் சேர்ந்து உருவாக்கியுள்ளனர்.



கே. சித்தார்த்தன் , கரண்குமார்

திருமுருக கிருபான்ந்த வாரியார் மேல்நிலைப்பள்ளி

காட்பாடி , வேலூர் – 632 006

செல் : 9611499731 நன்றி : IGNITE 2013

தள்ளுவண்டிக்கு ஸ்டியரிங் அல்லது பிரேக்கு

சாதாரணமாக தெருக்களில் காய்கறி விற்பவர்கள் தள்ளுவண்டி மூலம் ஜீவனம் நடத்தி வருகின்றனர். இந்த தள்ளுவண்டிகள் வீதிகளில் திருப்புவது, நிறுத்துவதில் சிரமங்கள் உள்ளன. இதில் பிரேக்கு இல்லை. இந்த குறைகளை நிவர்த்தி செய்ய தள்ளுவண்டிக்காரரின் மகள் நிதி (பிகார்) , மொஹம்மது உஸ்மேன் படேல் (மஹாராஷ்டிரா) , பவித்ரா (தமிழ்நாடு) , வித்யா (கார்நாடகா) நான்கு பள்ளி மாணவர்களும் தனித்தனியாக இந்த யுக்திகளை கடைபிடிக்க தூண்டு கோலாயிருந்தனர்.

நன்றி : IGNITE 2013

ஸ்ரீதரனின் கொட்டில் முறை ஆடு வளர்ப்பு

கோவை மாவட்டம் நெகமம் அருகேயுள்ள கொண்டே கவுண்டன்பாளையம் ஸ்ரீதரன் (45) விவசாயப் பண்ணை வைத்துள்ளார். தனது தோட்டத்தில் தென்னை , கத்தரி (நாட்டு ரகம்) வெள்ளாடு வளர்ப்பு , பசுவளர்ப்பு செய்து வருகிறார். தனது மனைவியுடன் சேர்ந்து பண்ணையிலுள்ள பணிகளை தாங்களே நேரிடையாக கவனித்து வருகின்றனர். தனது தோட்டத்திலேயே ஓர் ஓட்டு வீடு அமைத்து குடியிருந்து வருகிறார். இவர் +2 படித்து விட்டு டிப்ளாமோ இன் கம்யூனிகேஷன் , எலெக்ட்ரானிக்ஸ் படிப்பு முடித்தவுடன் மின்சாரவாரியத்தில் பில் கலெக்டராக வேலை பார்த்தார். இந்த வேலையை வீட்டிலுள்ள பெரியோர்கள் ஏற்றுக் கொள்ளாதலால் கௌரவமாக விவசாயத் தொழில் ஈடுபட தூண்டினர். இதனால் அவர்கள் சொற்படி இன்று சுதந்திரமாக தனது தோட்டத்தில் வீடு கட்டி பண்ணையை கவனித்து வருகிறார். இதற்கு உதவியாக இவரது மனைவியும் ஒத்துழைப்பு நல்குகின்றனர். தமிழ்நாடு கால்நடை பல்கலைகழக வல்லுநர்கள் கூறியபடி கொட்டில் முறையில் உள்ளூர் ரக நாட்டு வெள்ளாடுகள் தலைச்சேரி ஆடுகள் சேர்த்து 35 பெரிய ஆடுகளும் 20 குட்டிகளும் வளர்த்து வருகிறார். கொட்டில் முறையில் குட்டிகளையும் , பெட்டைகளையும், கிடாக்களையும் தனித்தனி அறைகளில் பராமரிக்க முடிவதால் வேண்டும் சமயம் இனப்பெருக்கம் செய்ய முடியும். குட்டிகளுக்கு மரத்தழை தீவனம் தனியாக இட்டு வளர்ச்சியைக் கூட்டலாம். இவரது கிடா குட்டிகளை வாங்குபவர்கள் இவரது பண்ணையை தேடி வந்து குட்டி வாங்கி செல்கின்றனர். குட்டிகள் உயிருடன் எடை கிலோ ரூ. 300க்கு கொடுக்கிறார். 10 கிலோ எடையுள்ள ஆண் குட்டிகளை சுமார் 3–5 மாதங்கள் வரை வளர்த்து விற்று விடுவார். பெட்டைகுட்டிகளை இனப்பெருக்கம் செய்ய வைத்துக் கொள்வார்.

கொட்டில் 100 அடி நீளத்தில் 10 அடி அகலத்தில் நீளவாக்கில் கிழ மேலாக அமைத்துள்ளார். இதற்கு தகர கூரை போட்டுள்ளார். உள்வாக்கில் 10' x 11' அளவில் அறைகளை மரச்சட்டங்கள் , குச்சிகள் மூலம் பிரித்துள்ளார். மொத்தம் 10 அறைகள் உண்டு . தரை மட்டத்திலிருந்து சுமார் 5 அடி உயரத்தில் மரப்பலகை (2 அங்குலம் அகலத்தில்) இடைவெளி (3/4 அங்குலம்) விட்டு பொருத்தியுள்ளார். இந்த இடைவெளியில் ஆடுகளின் சாணம், கோமியம் கீழே தரையில் விழுகும். இதனை சேகரித்து உரமாகப் பயன்படுத்துகிறார்.

ஆட்டிற்கு மரத்தழைகள்

கிளிரிசிடியா , அகத்தி , சவுண்டல் (சூபாபுல்) , பட்டுச்செடி , வேப்பஇலை , கோ–4 (யானைப்புல்), கோ–29 (சோளப்புல்) விளைவித்து தீவனமாக ஆட்டிற்கு 3–4 கிலோ ஒரு நாளைக்கு 2 வேளை இடுகிறார். குறிப்பாக குட்டிகளின் வளர்ச்சிக்கு மரத்தழைகள் அவசியம். ஒரு நாளைக்கு 1 கிலோ பசுந்தாள் தீவனம் குட்டிகளுக்கு கொடுக்கிறார். ஆடுகளை பகல் 1 மணிக்கு திறந்துவிட

வெளியே தொட்டியில் நீர் குடிக்க விடுகிறார். இதில் பருத்தி விதைப் பிண்ணாக்கு (கிலோ ரூ, 17) 6 கிலோ 6 மணி நேரம் ஊறவைத்து நீரில் கலந்து விடுகிறார். இத்துடன் சோயா தவிடு, அரிசிதவிடு , மக்காச் சோள விதை மாவு , அரிசிமாவு கலந்து ஆட்டிற்கு சுமார் 200 கிராம் அளவு நீரில் கலந்து விடுகிறார்.

தீவனத்தொட்டியை கொட்டிலுக்கு வெளியே அமைத்தல்

பொதுவாக கொட்டில் முறை ஆடு வளர்ப்பில் தீவனத் தொட்டிகள் (சுமார் 9 அடி நீளம் கொண்ட தகரத்தில் மரப்பலகை வைத்து வளைக்கப்பட்டது) கொட்டிலுக்குள்தான் வைப்பார்கள். தீவனம் போடும் சமயம் தீவனத்தை (மரத்தழைகள் , பசுந்தீவனத் தட்டை இவற்றை தீவனத்தட்டு வெட்டும் கருவி மூலம் தூளாக்கப்பட்டது) கொட்டிலுக்குள் ஏறிச் சென்று தான் இட வேண்டும். இவர் தீவனத் தொட்டிகளை சுமார் 5 அடி உயரத்தில் கொட்டிலுக்கு வெளிப்புறத்தில் வைத்திருப்பதால் தீவனம் இடுவது சுலபம் . நேரமும் மிச்சம் , தீவனமும் வேஸ்ட் ஆகாது.

பண்ணைவீடு வாஸ்துபிராரம் கட்டி குடியிருத்தல்

ஸ்ரீதரனின் பண்ணை விடு வாஸ்துபிராரம் எளிமையாக இருந்தாலும் சாஸ்திரப்படி முறையாக அமைத்துள்ளார். வீட்டின் வாயு மூலையில் வீட்டிற்கு சற்று (10 அடிரதள்ளி) பாத்ரூம் , கக்கூஸ், அக்னியில் சமையல் அறை , தென்மேற்கு (கன்னிமூலை) பகுதியில் சன்னல் வைக்காமல் முளு அடைப்பு செய்துள்ளார். இதனால் வீட்டில்கிடைக்கும் காந்த அலைகள் வெளியேறிவிடாமல் தங்கும். ஈஸான மூலையில் துளசி மாடம்.

ஸ்ரீதரன் , எண்ணெய்காரர் தோட்டம்
கொண்டேகவுண்டன் பாளையம் , நெகமம் (வழி) , கோவை மாவட்டம் , செல் : 9698476765 (முருகேசன்)

மக்காச்சோளத்தை தீவனத்தட்டைக்காக பயிர் செய்தல்

முருகேசன் (வயது 50) . சத்தியமங்கலம் தாலுகா , மாதம் பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறார். இவருக்கு சுமார் 11/2 ஏக்கர் நிலமும் , கேணியும் உள்ளது. இவரும் இவரது மனைவி பூங்கோதையும் சேர்ந்து விவசாயம் செய்து வருகின்றனர். இவர்கள் முன்பு கீரை , கொத்தமல்லி சாகுபடி செய்து நல்ல லாபம் எடுத்தனர். தற்சமயம் மக்காச்சோள பயிரை கதிர்க்காக அறுவடை செய்யாமல் தீவனத்தட்டைக்காக அறுவடை செய்து நல்ல வருமானம் எடுக்கின்றனர். இப்பகுதியில் பால் மாடுகள் வைத்திருப்போர் அதிகம் . வீட்டுக்கு 2 அல்லது 3 பசுமாடுகள் வைத்து பராமரித்து வருகின்றனர். மாடுகளுக்கு பசு தீவனத்தட்டை இடுவதால் பால் உற்பத்தி நன்றாக இருக்கிறது என கருதுகின்றனர். மாடு வளர்ப்போர்க்கு மக்காச்சோளத்தை பயிர் செய்து அறுவடைக்கு 20 நாட்கள் இருக்கும் சமயம் கதிர் நன்கு பால் பிடித்திருக்கும். இச்சமயத்தில் மக்காச்சோளத்தை தட்டையாக அறுவடை செய்து பசுந்தீவனமாகக் கொடுத்தால் மாடுகள் , ஆடுகள் விரும்பி எடுக்கும் . ஒரு மாட்டிற்கு 10 கிலோ கொடுத்தால் 10 லிட்டர் கொடுக்கும் மாடு 11 லிட்டர் தாராளமாகக் கொடுக்கும் என்று பூங்கோதை கூறுகிறார்.

வீரிய ஒட்டு மக்காச்சோளம் விதைத்தல்

ஒரு ஏக்கருக்கு 20 கிலோ (4 பாக்கெட்) காவேரி கம்பெனி விதைகளை வாங்கி தோட்டத்தில் நடவு செய்ய வேண்டும். இடைவெளி 1 x 1/2 அடி இடைவெளியில் விதைகள் ஊன்ற வேண்டும். பின்னர் 2 மாதம் வளர்ந்தபின் இதனை தேவையானோர்க்கு தட்டை அறுப்பதற்கு குத்தகைக்கு பேச வேண்டும். சுமார் ஒரு சிரகு வயல் (சுமார் 2 சென்ட்) ரூ.1000 – 1500 க்கு பேசி விடலாம். இதனை குத்தகை எடுத்த மாட்டுக்காரர் 2 மாதத்திற்கு மேல் எப்போது வேண்டுமானாலும் அறுவடை செய்து கொள்ளலாம். சிலர் வாரத்திற்கு 2 முறை அல்லது தேவைக்கேற்றாற்போல் கொஞ்சம் கொஞ்சம் அறுத்து சைக்கிளில் வைத்து வீட்டிற்கு கொண்டு செல்வர். இதில் 1 ஏக்கருக்கு செலவு போக (களை எடுப்பு , மருந்து அடித்தல் , நடவு) ரூ. 20,000 க்கும் குறைவில்லாமல் வருமானம் கிடைக்கும் என்று கூறுகின்றார். அதனால் கடந்த 3 வருடங்களாக மக்காச்சோளத்தட்டையை கதிருக்காக அறுவடை செய்யாமல் மாடுகளுக்கு தீவனத்தட்டைக்காக பேசி குத்தகைக்கு விடுகின்றார்.

எம்.என் . முருகேசன் , த/பெ. நஞ்சுண்டப்பகவுண்டர்
சொலவன் தோட்டம் , மாதம் பாளையம்
புளியம்பட்டி வழி , சத்தியமங்கலம் தாலுகா – 638 459
செல் : 8012265472

சாண எரிவாயுவை பயன்படுத்தி மஞ்சள் கிழங்குகளை பாதுகாத்தல்

மஞ்சள் அறுவடை செய்த பின் விற்பனை செய்யும் வரை சில மாதங்கள் சேமித்து வைப்பார்கள் . இச்சமயம் இதில் வண்டு விழுந்து மஞ்சள் பொடியாக உதிர்ந்துவிடும். இதற்கு விவசாயிகள் இரசாயண மருந்து பொருளான செல்பாஸ் என்ற மாத்திரைகளை பயன்படுத்துவர் . சத்தியமங்கலம் கெஞ்சனூரைச் சார்ந்த திரு. சுந்தரராமன் சாண எரிவாயு கலனிலிருந்து வெளி வரும் எரிவாயுவை சுமார் 1/2 மணி நேரம் மஞ்சள் கிழங்கு சேமித்து வைக்கப்படும் காற்று புகாத அறையில் விட்டு மஞ்சள் கிழங்குகளை பாதுகாக்கிறார். சாண எரிவாயு கலனிலிருந்து வாயுவை தனி குழாய் மூலம் மஞ்சள் சேமித்து வைக்கப்பட்டு இருக்கும் அறைக்கு கொண்டு செல்கிறார். பின்னர் ஜெலாட்டின் டியூப் வழியாக விட்டு சாண எரிவாயுவிலுள்ள ஈரப்பதத்தை நீக்கி உலர்த்தி தனி வாயுவாக மஞ்சள் குவித்து வைக்கப்பட்டிருக்கும் சாக்குகள் வரிசையில் விடுகிறார். மஞ்சள் சாக்குகள் மீது தார் பாய் மூலம் காற்று போகாமல் மூடி விடுகிறார். இதனால் மீத்தேன் வாயுவானது மஞ்சள் கிழங்குகளை வண்டு தாக்குதலிலிருந்து பாதுகாக்கிறது. இந்த உத்தியை கடந்த சில மாதங்களாக பயன்படுத்தி நல்ல பலன் கிடைத்து வருவதை திரு. சுந்தரராமன் தெரிவிக்கிறார்.

சுந்தரராமன் , ஐயர் தோட்டம்
கோம்பு பள்ளம் , செஞ்சானூர் வழி
சத்தியமங்கலம் – 638401, ஈரோடு மாவட்டம்
செல் : 9842724778 , தொலைபேசி : 04295 – 225047

எலுமிச்சையில் சொறி நோய்க்கு

எங்கள் குடும்பத்தில் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக நாட்டு எலுமிச்சை ரகம் பயிர் செய்து வருகிறோம். இந்த எலுமிச்சை மரத்தில் மெல்லிய தோல் கொண்ட பழங்கள் கிடைக்கின்றன. இதனால் ஜுஸ் பிழிவது எளிதாக இருக்கும் . சிறு பிள்ளைகளும் இந்த ரகத்திலிருந்து ஜுஸ் பிழியலாம். இந்த மரம் வருடத்திற்கு சுமார் 1700 முதல் 2000 காய்கள் வரை காய்க்கும். ஆனால் இந்த ரகம் சொறி நோய் என்கின்ற பாக்டீரியாவால் வரும் கேன்கர் என்ற நோய்க்கு ஆட்படுகிறது. இந்த நோயை கட்டுப்படுத்துவது சுலபமல்ல. இதற்கு சத்தியமங்கலம் சுந்தரராமன் அவர்களின் அலோசனைப்படி கீழ்கண்ட முறையில் மருந்து தெளித்து பார்த்தேன். இதன்படி 70 சதவீதம் நோய் கட்டுப்பட்டது .

முதலில் பஞ்சுகவ்யா தெளிக்க வேண்டும். அடுத்து ட்ரைக்கோ டெர்மா என்ற உயிர் கலவை 20 கிராம் எடுத்து 10 கிலோ தொழு உரத்தில் கலந்து மரத்திற்கு மரம் வைக்க வேண்டும். சூடோமோனாஸ் என்ற இயற்கை உயிர் கலவை 10 லிட்டர் நீருக்கு 20 கிராம் அளவில் கலந்து பயிருக்கு தெளிக்க வேண்டும். இதில் பஞ்சகவ்யா கரைசல் சேர்த்தும் தெளிக்கலாம். இதனை 15 நாட்கள் இடைவெளியில் தெளித்து வர வேண்டும். இம்முறையில் எனக்கு வருடத்திற்கு ரூ.25,000 செலவாகிறது. வருட வருமானம் ரூ. 1 லட்சம் கிடைக்கும் . தேவராஜன் , பெரிய கள்ளிப்பட்டி
புளியம்பட்டி வழி , சத்தியமங்கலம் தாலுகா
செல் ; 9865834536

ஈஸ்வரமூர்த்தியின் மூலிகை வைத்தியம்

கோபி வட்டம் பெரியகரட்டு பாளையம் கிராமத்தில் வசித்து வரும் ஈஸ்வர மூர்த்தி (56) மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவர் கல்யாணம் ஆகாமல் பிரம்மச்சரியமாக வாழ்ந்து வருகிறார். இவர் கோயம்புத்தூர் பகுதியில் வெள்ளியங்கிரி மலை பகுதிக்கு சென்று பல முக்கியமான மூலிகை செடிகளை கொண்டு வருவார். எட்டிபட்டை , கிளிமூக்கு கிழங்கு (கொல்லன் கோவை கிழங்கு) , காட்டுகத்தரி , தாளித்தழை போன்ற மூலிகை செடிகளை பாடம் செய்து வைத்து கொள்வார். தேவையான வியாதிகளுக்கு மருந்து கொண்டு வருகிறார்.

மாடுகளுக்கு கோமாரி நோய்க்கு

எட்டிபட்டை , கிளிமூக்கு கிழங்கு , காட்டுகத்தரி , தாளித்தழை , விராலிதழை , வால் மிளகு ஆகியவற்றை பவுடர் செய்து 2 ஸ்பூன் 2 வேளைக்கு கொடுக்க வேண்டும். நோய் வரும் முன்னர் 1 வேளை மட்டும் கொடுத்தால் போதுமானது. இவ்வாறு கொடுத்தால் 100 மாடுகளில் 90 மாடுகள் குணமாகும்.

மடி நோய்க்கு

அப்பகோவை இலை , மஞ்சள் சேர்த்து அரைத்து பால் கறந்த பின்னர் காலை , மாலை பத்து போன்று மடியில் போட வேண்டும் .

இரத்த ஒட்டம் சீராக நடைபெற

தாளிதழையை அரைத்து குடிக்கலாம். ஒரு மண்பானையில் சோற்றுகற்றாழையை நறுக்கி பணம்கருப்பட்டி சேர்த்து உளமூடி வைத்து மூடி விட வேண்டும். இதனை 48 நாட்கள் நித்தமும் காலையில் ஒரு வேளை சாப்பிட்டு வர இரத்தம் சீராக நடைபெறும்.

தோல் பத்து வந்தால்

தற்சமயம் பார்த்தீனியம் என்ற செடியினால் மக்களுக்கு அரிப்பு உண்டாகும். இதற்கு எட்டிக்காய் பட்டை பவுடர் மாத்திரை செய்து தருகிறார். எட்டிக்காய் பட்டை பவுடர் மிக சிறிய அளவு மட்டும் மாத்திரையாக உள்ளே எடுத்து கொள்ள வேண்டும். இல்லையெனில் விஷமாகும்.

கே.கே. ஈஸ்வர மூர்த்தி
வடக்கு வீதி
பெரிய கரட்டு பாளையம்
குருந்தூர் வழி , கோபி தாலுகா – 638 457
செல் 9566675549

பாரம்பரிய உணவு தயாரிப்பு முறைகள் மற்றும் மூலிகை மருத்துவ கருத்தரங்கு

பாண்டிச்சேரி , ஆரோவில்லிலுள்ள பிச்சாண்டிகுளம் வனக் காடுகள் நிறுவனம் பாரம்பரிய உணவு தயாரிப்பு முறைகள் மற்றும் மூலிகை மருத்துவ கருத்தரங்கை 29 மார்ச் 2014 அன்று ஏற்பாடு செய்திருந்தது. இக்கருத்தரங்கை ஒருங்கிணைப்பாளர் திருமதி . பார்வதி பேசுகையில் பாரம்பரிய உணவு மற்றும் மூலிகை மருத்துவ முறைகள் தற்பொழுது மக்கள் பயன்படுத்தாமல் இருந்து வருகின்றனர் என கூறினார். இதனை மறுபடியும் மக்கள் மத்தியில் கொண்டு வர முயற்சி செய்வதில் பல நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன . இந்த ஒரு நாள் கருத்தரங்கில் அங்காங்கே உள்ள பல விவசாயிகள் மற்றும் மருத்துவர்கள் 40 பேர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் தொகுக்கப்பட்ட பாரம்பரிய உணவு , மூலிகை தயாரிப்புகள் பின்வருமாறு :

மஞ்சுளாவின் பாரம்பரிய மூலிகை உணவு

விழுப்புரம் மாவட்டம் , திண்டிவனம் தாலுகா ஓமிப்பேர் கிராமத்தில் திருமதி. மஞ்சுளா (48) வசித்து வருகிறார். இவர் 20 வயதிலிருந்தே தனது அம்மாவிடமிருந்து மூலிகை வைத்திய முறைகளை கற்றுக் கொண்டுள்ளார். இவரது குறிப்புகள் பின் வருமாறு

முடக்கத்தான் ரசம்

தேவையான பொருட்கள் : வாதநாராயணன் இலை – 2 கைப்பிடி , முடக்கத்தான் இலை – 2 கைப்பிடி , இஞ்சி – 20 கிராம் , வத்தல் மிளகாய் – 30 கிராம் , மிளகு – 30 கிராம் , பூண்டு – 4 எண்ணம்.

செய்முறை : வாதநாராயணன் இலை , முடக்கத்தான் இலைகளை அரைத்து சாறு எடுத்துக் கொள்ளவும் இஞ்சி , வத்தல் மிளகாய் , மிளகு , பூண்டு எல்லாம் சேர்த்து அரைத்து இலை சாறுடன் கலந்து தாளித்து இறக்கவும். இந்த ரசத்தை சிறியவர் முதல் பெரியவர்கள் வரை சாப்பிடலாம். இதனால் மூட்டு வலி , வாதம் மற்றும் எலும்பு சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும்.

கல்யாண முருங்கை அடை

கல்யாண முருங்கை இலை 2 கைப்பிடி எடுத்து அரைத்து சாறு எடுத்து இதனுடன் புழுங்கல் அரிசி மாவுடன் கலக்கவும் . பின்னர் இதனுடன் சீரகம் , மிளகு, வத்தல் மிளகாய்தூள் சிறிதளவு சேர்த்து நல்லெண்ணெயில் சுட்டு எடுக்கவும். இந்த அடை சாப்பாடு மார்புச்சளி , இருமலை குணப்படுத்தும் .

முசுமுசுக்கை அடை

கேழ்வரகு மாவுடன் முசுமுசுக்கை இலை சேர்த்து வெங்காயம் , வத்தல் மிளகாய் , சீரகம் சேர்த்து நல்லெண்ணெயில் கலந்து சாப்பிட இருமல் , சளி , தும்மல் தீரும்.

திருமதி . மஞ்சுளா , ஓமிப்பேர்
மரக்கானம் தாலுகா , விழுப்புரம் மாவட்டம் – 604301

சாரணைக்குழம்பு

தேவையான பொருட்கள் : சாரணைஇலை – 2 கைப்பிடி , புளி – 10 கிராம் , வெங்காயம் – 4 , தக்காளி – 4 மிளகாய் – 4 , நல்லெண்ணெய் – தேவையான அளவு , உப்பு தேவையான அளவு . செய்முறை : சாரணை இலையை மைய அரைத்து வைத்துக் கொள்ளவும் . தக்காளி , வெங்காயம் , மிளகாயை நல்லெண்ணெயில் வதக்கி அரைக்கவும் . இதனுடன் சாரணை இலையும் தேவையான தண்ணீர் சேர்த்து பிசைந்து தாளிக்கவும். இதைச் சாப்பிட்டு வந்தால் பித்தம் , தலை சுற்றல் , தலைவலி தீரும்.

கருவேப்பிலை ஜூஸ்

கறிவேப்பிலை இலை – 2 கைப்பிடி , இஞ்சி – 10 கிராம் , பச்சமிளகாய் – 2 எண்ணம் , எலுமிச்சை சாறு – 100 மி.லி மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுத்து காலை வேலை சாப்பிட்டால் உடல் புத்துணர்ச்சி பெறும்.

ஆவாரம்பூ குழம்பு

தேவையான பொருட்கள் : ஆவாரம்பூ – 250 கிராம், கடலை பருப்பு – 100 கிராம், தக்காளி – 2 , வெங்காயம் – 2, பூண்டு – 2 , பச்சைமிளகாய் – 2 . மேற்கண்ட எல்லாம் சேர்த்து வேக வைத்து உப்பில்லாமல் தாளித்து சாப்பிட குழந்தை வளர்ச்சி பெறும்.

நாய் வேலை கடுகு துவையல்

தேவையான பொருட்கள் : நாய் வேலை கடுகு – 200

கிராம், பச்ச மிளகாய் – 2 , இஞ்சி – 2 , மிளகு – 10 எண்ணம் , புளி கரைசல்– 100 மி.லி மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து வதக்கி அரைத்து புளிக்கரைசல் சேர்த்து தாளிக்கவும். இதை சாப்பிட பசி எடுக்கும்.

சுரைக்காய் தோசை

1 கப் தோசை மாவை எடுத்து இதனுடன் 1/2 கிலோ சுரைக்காயை அரைத்து சேர்த்து இதனுடன் மிளகுதூள் , இஞ்சி தூள் , சீரக தூள் சேர்த்து தோசை செய்து சாப்பிடலாம்.

அத்திக்காய் கூட்டு

அத்திக்காய் – 200 கிராம் , தட்ட பயிறு – 50 கிராம் , தக்காளி – 4 எண்ணம் , வெங்காயம் – 4 எண்ணம் , தேங்காய் – 1 பூண்டு – 4 எண்ணம் , மிளகு – 10 எண்ணம் செய்முறை : முதலில் அத்திக்காய் மற்றும் தட்டை பயிரை தண்ணீர் விட்டு கொதிக்க வைக்கவும் . நன்கு வெந்தவுடன் அத்திக்காய் விதைகளை நீக்கி விடவும். பின்பு தக்காளி , வெங்காயம் , பூண்டு , மிளகு , சேர்த்து வதக்கி அரைத்து அத்திக்காய் தட்ட பயிரும் சேர்த்து கொதிக்க வைத்து தாளித்து சாப்பிடலாம். இதை சாப்பிட பெண்களுக்கு இனபெருக்க வியாதிகள் நீங்கும்.

நெல்லிக்காய் பாகு

பெரிய நெல்லிக்காய் – 30 எண்ணம் , பனங்கருப்பட்டி – 1/2 கிலோ . பனங்கருப்பட்டியை இடித்து பொடி செய்து கொள்ளவும் . நெல்லிக்காயை ஒரு துணிகொண்டு நீர் படாமல் நன்கு துடைக்கவும். பின்னர் 2 லிட்டர் தண்ணீர் கொள்ளளவுள்ள ஒரு பாட்டிலை எடுத்துக் கொள்ளவும் . பாட்டிலை தண்ணீர் இல்லாமல் நன்கு துடைத்துக் கொள்ளவும். முதலில் நெல்லிக்காயை கீழ்பகுதியில் அடுக்கவும். பின்னர் அதன் மேல் கருப்பட்டி தூளை போடவும் . இப்படி 10 அடுக்க வருமாறு செய்யவும் . கடைசியில் கருப்பட்டி தூளை போட்டு பாட்டிலை நன்கு மூடவும். 10 நாட்களுக்கு நன்கு ஊற வைக்கவும். பின்னர் பாட்டிலை எடுத்துப் பார்க்கும் போது நெல்லிக்காயிலுள்ள சாறு பிழிந்து கரைசல் போன்று வரும். அக்கரைசலை எடுத்து தினமும் 10 மி.லி வெறும் வயிற்றில் சாப்பிட்டால் வயிறு பிரச்சனை நீங்கும்.

பித்தம் , கபம் , காய்ச்சலுக்கு மூலிகை தேனீர்

சுக்கு , மிளகு , சீரகம் , கிராம்பு, ஏலக்காய் தலா 10 கிராம் , மல்லி – 50 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து வறுத்து பவுடர் செய்து பசும்பாலில் கலந்து சாப்பிடலாம்.

மணத்தக்காளி ஜூஸ்

மணத்தக்காளி கீரை – 250 கிராம் , வெந்தயம் – 100 கிராம் இரண்டையும் சேர்த்து அரைத்து சாறு எடுத்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் வயிற்று பிரச்சினை (வயிறு வலி , மந்தம்) நீங்கும்.

ஞாபக சக்தி பெற

வல்லாரை கீரை – 200 கிராம் , தூதுவளை – 100 கிராம் , துளசி – 200 கிராம் மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து நிழலில் காய வைத்து பவுடர் செய்து பனங்கற்கண்டு சேர்த்து பாலில் கலந்து சாப்பிட்டால் ஞாபக சக்தி பெருகும்.

அகிலாண்டத்தின் பாரம்பரிய உணவு

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் தாலுகா ஓமிப்பேர் எனும் கிராமத்தில் திருமதி . அகிலாண்டம் சக்கரபாணி (55) வசித்து வருகிறார். இவர் பள்ளி கூடமே சென்றதில்லை. பாரம்பரிய உணவு தயாரிப்பு முறைகள் மற்றும் சிறு சிறு மூலிகை வைத்திய முறைகளை செய்து வருகிறார். இவரது குறிப்புகள் பின்வருவன.

திப்பிலி ரசம்

திப்பிலி இலை – 10 இலை , மிளகு – 10 கிராம் , சீரகம் – 10 கிராம் , வெந்தயம் – 10 கிராம் , பெருங்காயம் 10 கிராம் , தனியா – 10 கிராம் , வத்த மிளகாய் – 2 , துவரம் பருப்பு – 50 கிராம் , புளி கரைசல் – 100 மி.லி , தக்காளி 2. செய்முறை : முதலில் மிளகு , சீரகம் , வெந்தயம் , பெருங்காயம் , தனியா மிளகாய் , ஆகியவை நன்றாக வறுத்து அரைத்து பவுடர் செய்யவும். பின்னர் திப்பிலி இலை , துவரம் பருப்பு போன்றவற்றை வேக வைத்து அரைக்கவும். மேற்கண்ட அனைத்தையும் ஒன்று சேர்த்து புளி கரைசலில் சேர்த்து கிளறி தாளித்து இறக்கவும். இதனை வாரத்திற்கு 2 முறை செய்து சாப்பிட்டால் வரட்டு இருமல் , சளி , ஆஸ்துமா குணமாகும்.

ஆடு மாடு காய்ச்சலுக்கு

துளசி – 2 கைப்பிடி , வெத்தலை – 5 இலை , நல்ல வேளை இலை – 2 கைப்பிடி , மிளகு – 10 கிராம் , இஞ்சி – 10 கிராம் , தேன் – 10 மி.லி , சித்தரத்தை – 10 கிராம் . மேற்க்கண்ட எல்லாம் சேர்த்து உருண்டை செய்து கொடுத்தால் மாட்டிற்கு காய்ச்சல் குணமாகும். (ஆட்டிற்கு பாதி அளவுக்கு குறைவாக கொடுக்கலாம்).

கழிச்சலுக்கு

நார்த்தங்காய் – 4 எடுத்து அரைத்து 200 மி.லி தண்ணீரில் கலந்து ஊற்றினாலே போதும்.

அகிலாண்டம் , க/பெ. சக்கரபாணி
ஓமிப்பேர் , மரக்கானம் தாலுகா
விழுப்புரம் மாவட்டம் – 604 301

சுந்தரமூர்த்தியின் வைத்தியம்

விழுப்புரம் மாவட்டம் , வானூர் வட்டம் , ஊஸ்தேரி வாழவிட்டான்பாளையம் எனும் கிராமத்தில் திரு.சுந்தரமூர்த்தி (78) வசித்து வருகிறார். இவர் சுமார் 40 ஆண்டுகளாக பாரம்பரிய கால்நடை மூலிகை வைத்தியம் செய்து வருகிறார்.

பாம்பு கடிக்கு

தேவையான பொருட்கள் : ஈஸ்வர மூலிகை வேர் – 20 கிராம் , கருடன் கிழங்கு வேர் – 20 கிராம் , வெட்பாலை இலை – 1 கைப்பிடி , தும்பை இலை – 1 கைப்பிடி , ஆடு தின்னா பாலை – 1 கைப்பிடி , நிலவேம்பு இலை – 1 கைப்பிடி , வெள்ளருகு இலை – 1 கைப்பிடி . மேற்க்கண்ட எல்லாம் சேர்த்து காய வைத்து பவுடர் செய்து 200 மி.லி தண்ணீருக்கு 100 கிராம் பவுடர் சேர்த்து கொடுக்கலாம்.

கண் கோளாறு

நேத்திரப்பூண்டு இலை – 1 கைப்பிடி , நந்தியாவட்டை – 1 கைப்பிடி இரண்டும் சேர்த்து நல்லெண்ணெயில் காய்ச்சி வடிகட்டி கண்ணில் 3 சொட்டு விடவும்.

கழிச்சலுக்கு

கிலுவை இலை – 1/2 கிலோ எடுத்து அரைத்து சாறு 200 மி.லி எடுத்து 100 மி.லி மோரில் கலந்து கொடுக்கலாம்.

வயிறு உப்பிசம்

பனம் பழச்சாறு – 100 மி.லி , வெங்காயம் – 3 இரண்டையும் சேர்த்து அரைத்து உருண்டையாக செய்து 2 வேளை கொடுக்கவும். மாற்று மருந்து : நாட்டு வாழைப்பழம் 5 இதனுடன் தூள் பெருங்காயம் – 50 கிராம் சேர்த்து கொடுக்கலாம்.

சுந்தரமூர்த்தி , வாழவிட்டான் பாளையம்
ஊஸ்தேரி வழி , வானூர் வட்டம் , விழுப்புரம் மாவட்டம்

கரட்டுப்பாளையம் பகுதி பாரம்பரியம்

சத்தியமங்கலம் கரட்டுப்பாளையம் பகுதியில் பாரம்பரியமாக கருடன்சம்பா, உதிரி , ராஜ போகம், வாழைப்பூ சம்பா நெய் ரகங்களை விதைத்து வந்தனர். நெல் அறுக்கும் சமயம் கொழுஞ்சி விதை , உளுந்து வீசிவிடுவர். அறுவடைக்குப்பின்னர் கொழுஞ்சியை வளரவிடுவர். உளுந்து பயிரை அறுடை செய்வர். கொழுஞ்சி பசுந்தாள் உரமாகப்பயன்படும். இப்பகுதியில் கண்ணாடி வீரியன் என்ற பாம்பு அதிகம் காணப்படும். பாம்புகடிக்கு வடக்கே ஓடும் உறிக்கட்டு செடியின் வேரைப்பயன்படுத்துவர். இப்பகுதியில் வீடு கட்ட காரையும் சுவரில் வழுவழுப்பு தர மாக்கல் , வெங்ககல் பொடி , முட்டை வெள்ளைக்கரு கலந்து பூசுவர். வீட்டு தோட்டத்தில் கோயில்களில் திருவாச்சி மரம் நடுவர். இது மஞ்சள் கலரில் பூபூக்கும். இதன் இலைகள் வெறும் வயிற்றில் சாப்பிட அல்சர் தீரும். சளிக்கு இரசம் வைத்து சாப்பிடுவர்.

மாட்டிற்கு சரியாக சாணம் வெளியேறாவிட்டால் விழும்பிதழை (விழுதி) யை கொடுப்பர்.

மாட்டில் கண்ணில் பூ விழுந்தால்

மூக்கனா சாரானத்தி வேர், வரிக்குமட்டிகாய் , அல்லிதழை , கொல்லன் கோவை கிழங்கு , ஆடு தின்னாப்பாளை , துளசி , துத்தி , வேப்பிலை , மிளகு வேப்பஎண்ணெய் சேர்த்து வேக வைத்து பின் ஆற வைத்த நீரை கண்ணில் சொட்டு விட வேண்டும். இதனை ஒரு நாளைக்கு 3 தடவை 15 நாட்களுக்கு செய்து வந்தால் குணமாகும் என்று கணபதிபாளையம் திரு. அய்யாச்சாமி கூறுகிறார்.

நேந்திரன் வாழைக்கு இயற்கை வழியில் ஊட்டம்

கணபதிபாளையம் கிராமத்தில் திரு. சத்தீஷ்குமார் (35) பி.காம். வரை படித்துவிட்டு தனது 10 ஏக்கர் பண்ணையை கவனித்து வருகிறார். ஆள்பற்றாக்குறை காரணமாக நீர் பாய்ச்சுதலை தெளிப்பு முறையில் ஸ்பிரிங்லர் போட்டு தென்னைக்கு ஊடே, நேந்திரன் வாழை சாகுபடி செய்து வருகிறார். தனது தோட்டத்திற்கு தேவையான உரத்திற்காக பிராய்லர் கோழி (6,000) வளர்த்து வருகிறார். தெளிப்பு குழாய் 40 அடிக்கு ஒன்றாக அமைத்துள்ளார். தெளிப்பு நீரில் கீழ்க்கண்ட ஊட்டக் கலவையை கலந்து விடுகிறார்.

பஞ்சகவ்யா , அமிர்தக்கரைசல் , பழக்காடி கரைசல் , நண்ணுயிர்க் கலவையை கலந்து விடுகிறார். 2 மாதங்களுக்கு ஒரு முறை 1 லிட்டர் அசோஸ்பைரில்லம் , 1 லிட்டர் ட்ரைக்கோடெர்மா விரிடிஸ், 1 லிட்டர் பாஸ்போபேக்டீரியம் நுண்ணுயிர்களைத் வாங்கி பழக்காடி கரைசல் , அமுதக்கரைசல் , பஞ்சகவ்யா போன்றவற்றுடன் சேர்த்து சுமார் 1 வாரம் ஒரு தொட்டியில் புளிக்க வைத்து பின்னர் தெளிந்த கரைசலை பாசன நீருடன் கலந்து விடுகிறார். இந்த முறையை முதலில் சத்தியமங்கலம் சுந்தராமன் தோட்டத்திற்கு சென்று பழகிக் கொண்டார். வாழைக்கு 10 மூட்டை வேப்பம்பிண்ணாக்கு 3 ஏக்கரில் வைக்கிறார்.

பழக்காடி

தோட்டத்தில் விற்பனையாகாமல் இருக்கின்ற கெட்டுப் போன பழங்களைக் கொண்டு அல்லது நகர்ப்புற சந்தைகளில் கிடைக்கும் . அழுகிய பழங்கள் சேகரம் செய்து நொதிக்க வைத்து உருவாக்கும் கரைசலுக்கு

பழக்காடி என்று பெயர். குறிப்பாக , வாழை , பனம்பழம் , பலாப்பழம் , மாம்பழம் போன்ற பழங்களை நாம் இதற்காகப் பயன்படுத்தலாம். இது தவிர தோட்டத்தில் பப்பாளி மரம் வளர்த்து விட்டால் ஆண்டு முழுவதும் பழம் கிடைக்கும்.

ஏக்கர் ஒன்றுக்கு தேவையான பொருட்கள் :

சாணம் – 20 கிலோ , கெட்டுப் போன பழம் – 20 கிலோ , தொல்லுயிர் கரைசல் – 100 லிட்டர் , தண்ணீர் – 80 லிட்டர் . ஊட்டக் கரைசல்களில் ஒன்று :அடர் அமுத கரைசல் – 30 லிட்டர் அல்லது , பஞ்சகவ்யா – 20 லிட்டர் . வேர்பூசன நோய்த் தடுப்புக்கு :மோர் கரைசல்களில் ஒன்று – 10 லிட்டர் , சூடோமோனாஸ் – 500 கிராம் , டிரைக்கொடெர்மா விரிடி – 500 கிராம் , நூற்புழு கட்டுப்படுத்த பைசிலோமைசிஸ் – 500 கிராம் , வேர்புழு கட்டுப்படுத்த பவேரியா ப்ராங்னியாரிட்டி – 500 கிராம் , மெட்டரைசம் – 500 கிராம் .

உயிர் உரங்கள் : அசோஸ்பைரில்லம் (தழை சத்து) – 2 கிலோ , பாஸ்போபாக்டீரியா – (மணி சத்து) – 2 கிலோ , பொட்டாசிய திரட்டு பாக்டீரியா – 2 கிலோ , வேம் (வேருட்ட பூசனம்) – 3 கிலோ . அனைத்தும் கலந்தால் மொத்தம் 200 லிட்டர் கலவை உருவாகும். 5 முதல் 7 நாட்கள் நொதிக்க விடவும். பின்னர் பாசன நீரில் இதனை சீராக கலந்து செல்லும் வகையில் பயன்படுத்த வேண்டும். 2 முதல் 4 ஆட்டு உதப்பை (கசாப்பு கடைகளில் வெட்டி வெளியே போடப்படும் மலக்குடல் கழிவு). இதுவே மாட்டு உதப்பையாக இருக்குமானால் ஒரு மாட்டு உதப்பை போதுமானது. உதப்பைகள் புதிதாக இருந்தால் மிகுந்த நுண்ணுயிர்கள் இருக்கும். இத்தகைய உதப்பைகளையும் மேற்படி பழக்காடியில் கலந்து நொதிக்க விடுவது கூடுதல் பயன் அளிக்கும். கெட்டுப் போன பழங்களை ஒரு நைலான் வலையில் கட்டி பழக்காடி கரைசலில் போட்டு மூழ்க விடவும். ஐந்து முதல் ஏழு நாட்கள் கழித்து கரைசலிலிருந்து இதனை வெளியே எடுத்து வைத்து அடுத்த முறை தயாரிக்கும் பழக்காடிக்கு மீண்டும் பயன்படுத்தலாம். பழங்கள் அனைத்தும் முழுமையாக சிதைந்து முடியும் வரை மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம். பழங்கள் சிதைந்து அவை குறையும் போது அதற்கு ஏற்ப தேவையான பழத்தை நைலான் வலையில் சேர்த்துக் கொள்ளலாம்.

வாழைக்கு ஊசி வண்டு தாக்குதலுக்கு

1 லிட்டர் நுண்ணுயிர் கரைசல் (மெட்டாரைஸம், பெவீரியா) வாங்கி வந்து 10 லிட்டர் நீருடன் 2 லிட்டர் மோருடன் கலந்து விடுகிறார். இதிலிருந்து 10 மி.லி எடுத்து ஊசியில் வாழைக்கு 15 நாள் இடைவெளியில் 2 தடவை செலுத்த ஊசி வண்டு (stem weevil) சுமாராகக் கட்டுப்படும். இது போதுமானதாகும். பிற விவசாயிகள் மோனாகுரோட்டாபாஸ் தெளிப்பார்.

கோழிகளுக்கு பஞ்சகவ்யா

சாதாரணமாகக் கோழிக்குஞ்சுகளுக்கு தீவனத்தில் 1 மி.லி ஒரு கோழிக்கு கொடுக்க ஈ கோலி நோய் வராது. அசோலாவை தீவனமாகக் கொடுத்தால் மிகவும் விரும்பி உண்ணும். இதனால் அசோலாவை நிலத்தில் பள்ளம் செய்து நீர் விட்டு வளர்த்து வருகிறார். வாழைத்தார் 71/2 – 81/2 கிலோ வரை எடை உள்ளதாக இருக்கும்.

சத்தீஷ் , கணபதிபாளையம் , சத்திய மங்கலம் தாலுகா , ஈரோடு மாவட்டம் , செல் : 9842651456

கால்நடை மூலிகை வைத்திய முகாம்

தூத்துக்குடி மாவட்டம் , கோவில்பட்டி தாலுகா சில்லாங்குளம் எனும் கிராமத்தில் கடந்த 26 மற்றும் 27 ம் தேதி மார்ச் மாதம் 2014 அன்று சில்லாங்குளம் சமுதாயக் கூட்டத்தில் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்களான திரு. மல்லுசாமி மற்றும் திரு. திருமால் அவர்களும் சேர்ந்து நபார்டு வங்கியின் உதவியுடன் இரண்டு நாட்கள் கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி நடைபெற்றது. இதில் சேவா தொண்டு நிறுவன பயிற்சியாளர்கள் அழகுமலை , செல்லம்மாள் கலந்து கொண்டனர். விவசாயிகள் , பெண்கள் 65 பேர் கலந்து கொண்டனர். திரு. மல்லுசாமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பின்னர் மதுரை சேவா தொண்டு நிறுவன பயிற்சியாளர் அழகுமலை பேசுகையில் நமது நாட்டில் என்னென்ன வகையான கால்நடை இனங்கள் உள்ளன அதன் வரலாறு மற்றும் எத்தனை வகையான நோய் தாக்குதல் உருவாகின்றன அதனை மூலிகைச் செடிகள் கொண்டு எவ்வாறு தடுக்கலாம் என்பதனை எடுத்துக் கூறினார். மதிய உணவு இடைவேளை முடிந்தவுடன் கால்நடைகளுக்கு

மூலிகை மசாலா உருண்டை தயார்செய்து பயிற்சி விளக்கம் செய்யப்பட்டது. மாடுகளுக்கு வரும் வயிற்றுப் பிரச்சணை , சினைபிடிக்காமல் இருத்தல் , காயம் புண் , மடி நோய் , செம்மறி ஆடுகளுக்கு வரும் நீலநாக்கு நோய் போன்ற நோய்கள் சம்மந்தமாக கலந்துரையாடல் விவசாயிகள் மத்தியில் நடைபெற்றது. அக்கிராமத்தில் சுமார் 50 மாடுகளுக்கு மூலிகை மசாலா உருண்டை கொடுக்கப்பட்டது. மறுநாள் காலை 27.3.2014 அன்று தூத்துக்குடி மாவட்டம் ஈராச்சி கிராமத்தில் காலை 11 மணியளவில் கால்நடைகளுக்கு குடற்புழு மருந்து தயார் செய்து செயல் விளக்கம் செய்யப்பட்டது. பின்னர் திரு. மல்லுசாமி பேசுகையில் பசுவின் கோமியம் , சாணம் கொண்டு இயற்கை காய்கறி தோட்டம் அமைத்து அதில் குழு அமைத்து விவசாயத்தைப் பெருக்க யோசனை கூறினார் . இந்த முயற்சிக்கு நபார்டு வங்கி பெறும் உதவி செய்யும் எனக் கூறினார். சாதாரணமாக ஒரு நாளைக்கு சுமார் 40 லிட்டர் கோமியமும் 20 கிலோ சாணமும் பசு வெளியேற்றுகிறது . இதனைப் பயன்படுத்தி இயற்கை ஆர்வலர்கள் குழு அமைத்து அவர்களிடமிருந்து சாணம் கோமியத்தை விலைக்கு வாங்கி காய்கறி குடில் அமைக்கலாம் எனக் கூறினார். முதலில் மாட்டு கட்டுதரை அமைக்கவும் கோமிய தொட்டி கட்டவும் ஏற்பாடு செய்யவும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இந்த 2 கிராமங்களான சில்லாங்குளம் , ஈராச்சியில் பசு கோமியம் மற்றும் சாணம் கொண்டு இயற்கை வேளாண்மை மேற்கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

பாபுநாராயணசாமியின் வேளாண்மை

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தாலுகா சில்லாங்குளம் கிராமத்தில் திரு. பாபு நாராயணசாமி (48) வசித்து வருகிறார். இவர் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்குச் சொந்தமாக 12 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் உளுந்து , தக்காளி , நித்திய கல்யாணி , மிளகாய் போன்ற பயிர்களை பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் 3 கறவை மாடுகள் பராமறித்து வருகிறார். இவரது இயற்கை விவசாய அனுபவ முறைகள் பின்வருமாறு.

மூலிகை பூச்சி விரட்டி

வேப்பிலை – 1 கிலோ , புங்க இலை – 1 கிலோ , நொச்சி இலை – 1 கிலோ, ஆடு திண்ணாப்பாலை – 1 கிலோ , கருவேலம் இலை – 1 கிலோ வரிக்குமட்டி இலை – 1 கிலோ எருக்கு இலை – 1 கிலோ , துத்தி இலை – 1 கிலோ , பூண்டு – 200 கிராம் , இஞ்சி – 200 கிராம் , மிளகாய் வத்தல் – 200 கிராம் , கோமியம் 50 லிட்டர். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து 50 லிட்டர் கோமியத்தில் 21 நாளைக்கு ஊர வைக்கவும். பின்னர் கரைசலை எடுத்து வடிகட்டி 1 லிட்டருக்கு 10 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிர்களுக்கு தெளிக்கலாம்.

பயிர் நன்கு வளர மூலிகை ஊட்டம்

தரை புகையிலை 1 கிலோ எடுத்து அரைத்து சாறு 500 மி.லி இதனுடன் 1 லிட்டர் மண்ணெண்ணெய் கலந்து 1 லிட்டர் கரைசலுக்கு 10லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கலாம். பயிர் வளர 5 கிலோ மீன் கழிவு பொருட்கள் இதனுடன் வெல்லம் 1 கிலோ , சேர்த்து 50 லிட்டர் தண்ணீரில் கலந்து 48 நாளைக்கு ஊர வைக்கவும். பின்னர் 10லிட்டர் தண்ணீருக்கு 1.5 மி.லி கரைசல் கலந்து பயிருக்கு தெளிக்கலாம்.

பாபு நாராயண சாமி , த/பெ. நல்லையா
அம்பளார் வீடு , 2/12 பெருமாள் கோவில் தெரு
சில்லாங்குளம் (அஞ்சல்) ,ஒட்டப்பிடாரம் தாலுகா
தூத்துக்குடி – 628 718 , செல் : 9786934239

வாசகர் வட்டம்

பாரம்பரிய நவதனிய உணவு

புதியதலைமுறை வார இதழில் தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் அடி தள கண்டுபிடிப்புகளை கண்டறியும் 9 வது சுற்று போட்டிக்கான விளம்பரத்தைப் படித்தேன். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். திருமணமாகி இரண்டு பெண் பிள்ளைகளும் உள்ளனர். தற்போது 50 சதவீதம் பெண்கள் சமைப்பதும் 90 சதவீதம் நேரத்தை டிவி பார்ப்பதிலும் வீணாக நேரத்தை கழிக்கின்றனர். ஏதாவது சமுதாயத்திற்குப் பயன்படும்படி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் – நிறைய தினசரி – வார இதழ்களுக்கு மருத்துவ சமையல் , பெண்கள் ஆரோக்யம் – சிறுவர்களுக்கான நல்ல கருத்துள்ள சிறு கட்டுரைகள் மற்றும் துனுக்குகளை எழுதி வந்தேன். அவ்வப்போது திருச்சி வானொலியில் உரையாற்றி வந்தேன். சம்பாதிக்க எளிதாக எத்தனையோ தொழில் இருந்தாலும் கூட, எவரும் செய்யாத மக்களுக்குப் பயன்படும்படியாக செய்யலாம் என்ற எண்ணத்தில் உதித்தது தான் எங்களது சுகம் இயற்கை உணவு (Suga Diet Natural Foods) . உண்மைக்காக எதை வேண்டுமானாலும் தியாகம் செய் எதற்காகவும்

உண்மையைத் தியாகம் செய்யாதே – மகாத்மாகாந்தி

தற்போது வயது வித்யாசமின்றி சர்க்கரை நோயும், பீபி அதிகமான உடல் எடை , மற்றும் பெண்களுக்கு கர்ப்பை பிரச்சினைகள் என்றும் ஊட்டச்சத்துப் பற்றாக் குறை – இரும்புச்சத்துக்குறைபாடு என்றும் பலதரப்பட்ட வியாதிகளில் அனைத்து வயதினரும் கஷ்டப்பட்டு மருந்து மாத்திரைகளை உணவாக எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை அதிகம் உள்ளது நமது நாடு.இந்த சர்க்கரை நோயாளிகளுக்கு அரிசி உணவிற்கு மாற்றாக கோதுமை – கேழ்வரகு மட்டுமே சாப்பிடும் வழக்கமாக இருக்கின்றது. சரி இவர்களுக்கு ஏதாவது மாற்று உணவுப் பொருள் தயாரித்தால் என்ன என்று யோசித்தேன். சிறுதானியங்களான வரகு , தினை , சாமை , குதிரை வாலி , கம்பு , கேழ்வரகு இவைகளும், கொள்ளு, வெந்தயம் , உளுந்து பார்லி , சோயா இவகைளையெல்லாம் கொண்டு டயட் தோசை மாவு , டயட் உப்புமா குருணை , டயட் கஞ்சி மாவு , பொங்கல் மிக்ஸ் , இட்லிப்பொடி , பருப்புப் பொடி , தினை மாவு என்று பலப்பல சுவையான , ஆரோக்யமான மாவுகளைத் தயார் செய்து எங்கள் வீட்டில் தினசரி உணவாக சாப்பிட்டோம். பின்பு நண்பர்கள்உறவினர்களுக்கும் அக்கம்பக்கத்தினருக்கும் கொடுத்து சாப்பிடச் சொன்னோம் . எங்கள் சுகாடயட் சிறு தானிய உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்ட அனைவருமே மிகவும் நன்றாக இருக்கிறது. இதை வியாபாரமாக ஆரம்பித்து நிறைய மக்கள் பயன்படும்படி செய்யலாமே என்று ஊக்கப்படுத்தினர். 12 வருடங்கள் சிறுக சிறுக விரிவுபடுத்தி இப்போது தமிழக சர்வோதய சங்கம் காதி பவன் கடைகளுக்கு மட்டும் சப்ளை செய்கிறோம். ஆமை வேகத்தில் தான் எங்களது முன்னேற்றம் என்றாலும் ஆனித் தரமான முன்னேற்றம் பெரிய அளவில் விளம்பரம் செய்யவோ வசதி கிடையாது. இதனை வாங்குவோர் சாப்பிட்டுப் பார்த்து மற்றவர்களிடம் கூறியது தான் மிகப் பெரிய விளம்பரம் அத்தனைத் தரமும் ஆரோக்யமும் நிறைந்தது எங்களது தயாரிப்புகள் . இது இந்த நல்ல உணவை சாப்பிட வைக்க இத்தனை கஷ்டப்பட வேண்டியிருக்கிறதே இதை விட்டு விடுவோமா என்றெல்லாம் பல தடவைகள் தோன்றியது. எண்ணிய எண்ணியாங்கு எய்துப் எண்ணியார் திண்ணிய நாகப் பெறின் .ஆனாலும் துரித உணவுகளும், வியாதிகள் மயமுமான மக்கள் பழக்கங்களை மாற்றி இயற்கை உணவுகளைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கி ஓரளவு வெற்றியும் அடைந்திருக்கிறோம். இந்த சிறு தானியங்களை மதிப்பு கூட்டிய உணவுப் பொருட்களாக மாற்ற சுத்தப்படுத்தவே பெரிய தொகை சம்பளமாகக் கொடுக்கிறோம். பின் முளைக்க வைத்து – பார்த்துப் பார்த்து செய்கிறோம். மதுரை சர்வோதய சங்கம் கடையில் (Crime Branch எதிரில்) எங்களது சுகம் இயற்கை உணவு பொருட்கள் அனைத்தும் விற்பனைக்கு உள்ளன.

இராஜேஸ்வரி இரவிகுமார் , 115, வடக்கு தெரு
திருவாரூர் - 613 204 , Ph: 04362260308
Cell :9488574308

அதிக பால் தரும் நாட்டு பசு மாட்டு விந்து

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் தர்பாக்கர், கிர் , சாகிவால் போன்ற அதிக பால் தரும் இந்திய நாட்டு பசு இனங்களில் விந்து கிடைப்பதற்கு நாங்கள் வழி செய்துள்ளோம். தேவையானோர் எங்களை அணுகி பயன் பெறலாம்.

டாக்டர் . பாலாஜி , தஞ்சாவூர் , செல் : 9940756878

மரத்துவரை

100 கிராம் மரத்துவரை ரிச்சா 2000 என்ற இரகம் நம் வழி வேளாண்மை மூலம் கிடைக்கப் பெற்றேன். இதை 20 சென்ட் நிலத்தில் ஊடு பயிராகப் பயிரிட்டேன். இயற்கை முறையில் பஞ்சகவ்யா , தொல்லுயிர்கரைசல் , அமிர்தக் கரைசல் , பழக்காடிகரைசல், நுண்ணுயிர்க்கலவை ஆகியவற்றை பாசனநீரில் கலந்து விட்டேன். மரத்துவரை 10 x 10 அடி இடைவெளியில் பயிர் செய்தேன். காய்ப்புழு தாக்குதல் இல்லை . 50 கிலோ மகசூல் எடுத்துள்ளேன். இந்த ரக விதைகள் என்னிடமிருந்து அல்லது நம் வழி வேளாண்மை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சுந்தரராமன் , கோம்பு பள்ளம் , செஞ்சானூர் வழி
சத்தியமங்கலம் – 638401 , ஈரோடு மாவட்டம்
செல் : 9842724778 , தொலைபேசி : 04295 – 225047

கரும்பில் எலி தாக்குதலை கட்டுப்படுத்தல்

கரும்பிற்கு ஏக்கருக்கு 30 கிலோ சுண்ணாம்பும் , வேப்பெண்ணெய் 3 லிட்டர் கரைத்து பாசனநீரில் கலந்து விடுகிறேன். இத்துடன் மீனோ அமிலம் (மீனும் வெல்லமும் ஊற வைத்த கரைசல்) பாசன நீரில் கொடுக்கிறேன். இதனால் எலிகளின் தாக்குதல் ஓரளவு குறைந்துள்ளது.

பார்வதி வெங்கடேசன் , பள்ளத்து தோட்டம்
அலுகுளி அஞ்சல் , கோபி தாலுகா ,ஈரோடு மாவட்டம்